# செந்தமிழ்

தொகுதி 77 செப்டம்பர் '83 பகுதி 3

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

## தமிழ் இலக்கிய இதழ்

அறிஞர்தம் இதய ஓடை ஆழநீர் தன்னை
மொண்டு
செறிவுறப் பழகுநல் செந்தமிழ் வாழ்த்துவீர்!

ஆசிரியர் : டி.பி.எம். பெரியசுவாமி

# செந்தமிழ்

தொகுதி 77 செப்டம்பர் 1983 பகுதி -

உள்ளுரை

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசிரியர் பக்கம் | |
| 2. | பழனியும் காவடிச் சிந்தும்<br>— மு. மாணிக்கம் | ... 101 |
| 3. | அதிமதுரகவி — ஓர் ஆய்வு நோக்கு<br>— திருமேணி நாகராசன் B. Lit, B.Ed | ... 113 |
| 4. | பாவேந்தர் கவிதைகளில் சிலம்பின்<br>— செல்வாக்கு வே. காத்தையன் M.O.L.Phd | ... 119 |
| 5. | பழம் பெரும் பதிப்பாசிரியர்<br>— பழநி. அரங்கசாமி | ... 125 |
| 6. | ஆண்மக்கட் பெயர்கள் — ஓர் ஆய்வு<br>— அ. நடராசன் எம். ஏ. எம். பில் | ... 133 |
| 7. | ஊர்வசி<br>— ப. முத்துச்சாமி எம்.ஏ. எம்.எட் | ... 135 |
| 8. | தொழிலாளிக்கு நோபல் பரிசு | ... 138 |
| 9. | அறிவியல் வினா—விடை<br>— திரையன் பி.எஸ்ஸி | ... 139 |
| 10. | பைந்தமிழ் வளர்த்த தேவர்<br>— கலைமாமணி ஆறுமுகனார் | ... 142 |
| 11. | இலங்கைத்தமிழர் | ... 144 |
| 12. | நூல் மதிப்புரை | ... 152 |
| 13 | சங்கச் செய்திகள் | ... 155 |
| 14. | தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு | ... 161 |

## ஆசிரியர் பக்கம்

செந்தமிழ் வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கிப் பாராட்டும் அன்பர்களைச் சென்னி தாழ்த்தி இருகரங்கூப்பி வணங்கி வாழ்த்துகிறோம். வாயார வாழ்த்துகின்ற உள்ளங்கள் செந்தமிழ் பயில்வோரின் எண்ணிக்கையினையும் பெருக்குவது தமது கடமை என்று எண்ணுதல் வேண்டும். இலக்கியம், அறிவியல், வரலாறு, அரசியல் உள்ளிட்ட பல்வேறுவகைகளில் இந்த இதழிலும் கட்டுரைகள் வெளியாகின்றன. செந்தமிழைச் சுவைபடக் காணுதல் வேண்டும் என்ற நன்னோக்கம் கொண்டோர் அன்பு கூர்ந்து உரிய ஆலோசனைகளுடன் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

நூல் மதிப்புரை தொடர்ந்து வெளியாகும். மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர் 'செந்தமிழ்' தமிழ்ச்சங்கம். மதுரை-1 என்ற முகவரிக்கு அனுப்பலாம். கவிதை, கட்டுரை அனுப்புவோர் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதியோ, தட்டச்சு செய்தோ அனுப்புதல் நன்று. கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய அஞ்சல் தலைகள் வைத்து அனுப்புதல் வேண்டும்.

— ஆசிரியர்.

# பழனியும் காவடிச் சிந்தும்

டாக்டர் மு. மாணிக்கம்,
தமிழ் பேராசிரியர்,
பழனி

ஒரு காலத்தில் தமிழ் நாடு சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என்று ஐந்து மண்டலங்களாகப் பிரிந்து மூவேந்தர்களாலும், குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டு வந்தது. இவற்றுள் கொங்கு மண்டலம் அல்லது கொங்கு நாடு என்பது இற்றைக் காலத்திய கோவை, நீலகிரி, பெரியார், சேலம் மாவட்டங்களாகும். இக் கொங்கு நாட்டின் வரலாற்றை 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கொங்குச் சோழனாகிய கரிகாலனால் வெளியிடப்பெற்ற சோழன் பூர்வ பட்டயம் கூறுகிறது. கொங்கு நாட்டின் தெற்கு எல்லையாகப் பழனி இருந்திருக்கிறது. ஆனால் அண்மைக் காலத்தில் மதுரை மாவட்டத்துடன் பழனி சேர்க்கப் பெற்றுள்ளது, மதுரை மாவட்டத்துடன் பழனி வட்டமும் சேர்க்கப்பட்ட பின்பு பழனிக்கும் மதுரைக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. எனவே மதுரை வரலாறு என்பது பழனி வரலாற்றையும் உள்ளடக்கியதாக உள்ளது.

பழனி என்ற ஊர்ப்பெயர் எப்படி வந்தது? பழனி என்று சிலரும், பழநி என்ற சிலரும் எழுதி வருகின்றனர். எது சரியானது? பழநி என்ற பெயரை எழுதுகின்றவர் முருகன் தன் பெற்றோருடன் கோபித்துக் கொண்டு தனியே வந்து ஞானப் பழமாக நின்றபோது பார்வதி "பழம்நீ" என்று அழைத்தால் இவ்வூருக்குப் "பழநி" என்று வந்தது என்று கூறுவர். கந்தபுராணத்தில் இக்கதை இல்லை. கந்தபுராணத்திற்கு முன்பே இவ்வூர் "பழனி" என்று இவ்வூர் மலைக்கோயிலில் காணப்படும் வீரசோழன் (1119 - 1134), வீரபாண்டியன் (1252 - 1267) ஆகியோரின் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது.

"பழம் நீ - என இறைவி அழைத்ததால் பழனி எனப்பெயர் பெற்றதாகப் பௌராணிகர் கூறுவர். இது கற்பனையே" (1) என்று

கி. நாச்சிமுத்து கூறுகிறார். ''. . . . .' பொதினி' என வழங்கப்-பட்ட பெயரே பிற்காலத்தில் பழனி எனத் திரிந்தது'' என்பதும் அவரது கூற்றே. எனவே பழநி என்று எழுதுவதும் அது வந்ததற்-காகக் கூறும் கதையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ''பொதினி-பழனி என்பன முறையே பொதிநீர், பழநீர் - என்பனவற்றின் திரிபாகப் பழனத்தின் பொதிந்த சாறு எனவும், பழத்தின் சாறு எனவும் பொருள்தரும். பழச்சாறும் கள்ளும் நிறையக் கிடைக்கும் வேளிருடைய மலைகள் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம் என்பர் துரை-யரங்கனார்''.

பொதினி என்னும் பெயர் சங்க காலத்திலேயே வழங்கி வந்துள்ளது. மாமூலனார் அகநானூற்றுப் பாடல்கள் இரண்டில் இச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். பொதினி என்று மாமூலனார் குறிப்பது தற்காலப் பழனியையே குறிக்கும்.

''முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியாணர்ப் பொதினி'' (1).

''முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி'' (61).

கொடைக்கானல் மலையை முன்பு கோடைப் பொருநன் பண்ணி என்பவன் ஆண்டு வந்தான். அவனையும் அவன் மலை-யையும் பெருந்தலைச் சாத்தனார் அகநானூற்றில் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்:

''தண்கடற் பிறந்த முத்தி னாரமும்
முனைதிரை கொடுக்குந் துப்பின் தன்மலைத்
தெறலரு மரபிற் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தி னாரமும்
இருபே ராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பிற் றென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியி னுணர்த்தும் சிறுவரை யல்லது
வரையின்றி இரவலர்க் கீயும்
வள்வா யம்பிற் கோடைப் பொருநன்
பண்ணி . . . . . . . . . . . . . . . . . . . . .'' (13)

பழனிமலைத் தொடர் என்று இன்று அழைப்பது பழைய 'பண்ணிமலைத்' தொடராகலாம். பண்ணிமலைத் தொடரில் அமைந்திருந்ததால் இக்குன்றம் பண்ணி > பழனி என அழைக்கப்பட்டிருக்கலாம் என்கிறார் கி. நாச்சிமுத்து.

பண்ணி என்ற அரசன் பெயரில் ஏற்பட்ட மலையின் பெயரான பண்ணி என்பதைப் பன்றி என்ற சொல்லில் கொச்சை வடிவம் என்று கருதி பன்றிமலை என்று கொண்டு அதனையே வடமொழியாளர் வராககிரி என வழங்கியிருக்க வேண்டும். பன்றிமலை என்பதும் வராககிரி என்பதும் தவறான வழக்கேயாகும்.

''பழனங்கள் சூழ்ந்திருந்தமையின் பழனி என்று கூறப்பட்ட பெயரே இக்காலத்தில் பெரிதும் வழக்கிலுள்ளது என்று டாக்டர் அ. ம. பரிமணம் கூறுகிறார். அவர் கருத்துப்படி பழனங்கள் சூழ்ந்திருந்ததால் இவ்வூர் பழனி என்று காரணப் பெயராக அமைந்தது என்பதாகும். பழனிக்கு வயலூர் என்ற பெயரும் உண்டு. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபானி சுவாமிகள், சித்திரமாலை என்னும் நூற்பகுதியில்

''அருள் நலம் இலார்களைத் தடுத் தாளாய்
அணிகொள் வயலூர் மலைக்கண் - நிற்போனே''
(பாடல்-16)

''இசியுமுக வானரங்கொள் பொழில் சூழ்சீர்
இலகும் வயலூர் புரந்த - இறையோனே'' (பாடல்-24)

என்று பழனியை வயலூர் என்று கூறுவது கருதத்தக்கது.

மேற்கூறிய காரணங்களைப் பார்க்கும் பொழுது பழனி என்று கூறுவதுதான் பொருத்தம், பழநி என்று கூறுவது தவறு என்றுபடுகிறது.

பழனிக்குப் பல பெயர்கள் உண்டு. அவையாவன :

பழனாபுரி, பழனி, வயலூர், ஆவிநன்குடி, திருவாவினன்குடி, சித்தன் வாழ்வு, பொதினி, வைகாவூர், சிவகிரி, பண்ணி, விசையகிரி, சிவாசலம், சந்திர சைலம். வராக கிரி.

ஆவிநன்குடி என்பது பழனியையே குறிக்கும். ''முப்பேர-ரசர்களின் ஆட்சிக் காலத்தில் ''வேள்'' என்னும் பெயருடைய குறுநில மன்னர்கள் தமிழகத்தில் ஆங்காங்கே ஆட்சி புரிந்தனர். அவர்களில் 'வையாவிக்கோ' என்றும் 'ஆவி' என்றும் பெயர்கொண்ட வேளிர்களால் ஆளப்பட்டமையால் இப்பகுதி வையாபுரி நாடு என்றும் ஆவினன்குடி என்றும் வழங்கலாயிற்று'' என்கிறார் டாக்டர் அ.ம. பரிமணம். திருவாவினன்குடி என்பதை திரு + ஆ + இனன் + கு + டி = திருவாவினன்குடி என்று பிரித்து இலக்குமியும், காம-தேனுவும், சூரியனும், பூமியும், மதியும் வழிபட்ட தலம் என்றும் பௌராணிகர் விளக்குவர்.

வைகாபுரி அல்லது ஆவினன்குடி என்பது மலையின் அடி-வாரப் பகுதியில் இருந்த ஊர் என்றும் பழனாபுரி என்பது தற்போது பெரியநாயகியம்மன் கோவிலும் பெருமாள் கோவிலும் உள்ள நகரின் மேற்குப்பகுதி என்றும் கருதப்படுகிறது.

சோழன் பூர்வபட்டயம் ''சேரமான் பெருமாள்,

1. திருவாவினன்குடிக் கோயில்,
2. தென்பழனி என்ற ஊரும் கோட்டையும்,
3. வையாபுரிக்குளம்,
4. சிவகிரி என்ற பழனிமலை மேல் முருகனுக்குக் கோயில்,
5. பாலசுப்பிரமணியர் பேரில் பால (வால) சமுத்திரம் என்ற ஊர்-

ஆகிய இவைகளைக் கட்டினான். கரிகாலச் சோழன் பழனாபுரி நகரமும் கைலாசநாதர் பெரிய கோயிலும் கட்டினான்'' என்று கூறுகிறது.

தென்பழனி அல்லது பழனாபுரி என்பது தற்போதைய பழனியின் மேற்குப் பகுதி என்றும் வைகாவூர் அல்லது திருவாவினன்குடி என்பது மலையடிவாரம் என்றும், ஏறத்தாழ 16-ஆம் நூற்றாண்டில் இவ்விரு பகுதிகளும் தனித்தனி ஊர்களாக இருந்தன என்றும் தெரிகிறது. பிற்காலத்திலே தான் இவை ஒன்றாயிருக்க வேண்டும்.

பழனிமலைக் கோயில் எக்காலத்தது? கோடைப்பொருநன் பண்ணி என்பவன் காலத்திலேயே தற்காலப்பழனி மலையில் குறவர் வணங்கிய முருகக்கடவுள் வீற்றிருந்ததற்குரிய குறிப்பு பெருந்தலைச் சாத்தனார் பாடிய அகனானூற்றுப் பாடலில் உள்ளது. இப்பொழுதுள்ள மலைக் கோவில் 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் என்ற சேரஅரசனால் கட்டப்பட்டது என்று நம்பப்படுகிறது. அதற்கேற்பக் கோவிலின் வலதுபுறச் சுவரில் சேரமான் சிலை உள்ளது.

அருணகிரிநாதர் தம் திருப்புகழில் சேரமான் பெருமாள் ஆண்ட வைகாவூர் நாட்டில் உள்ள ஆவினன்குடியில் வாழும் தேவர்கள் வணங்கிய பெருமாளே என்று முருகனை வணங்குகிறார்:

''ஆத ரம்பயி லாருரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி - -

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே''.

முருகனுக்குரிய ஆறுபடைவீடுகளில் ஒன்றாகத் திருவாவினன்குடி கூறப்படுகிறது. நக்கீரர்பாடிய திருமுருகாற்றுப்படையில் முருகன் தெய்வானையுடன் காட்சிகொடுப்பதாக உள்ளது. ஆனால் தற்போதுள்ள திருவாவினன்குடிக் கோயிலில் முருகன் அவ்வடிவில் இல்லை.

''தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரியன்''

என்று வரும் திருமுருகாற்றுப்படையின் பாடற்பகுதிக்கு,

நச்சினார்க்கினியர் ''வருத்தமில்லாத அருட்கற்பினையுடைய தெய்வானையாருடன் ஆவினன்குடியென்னும் ஊரிலே சிலநாள் இருத்தலுமுரியன்'' என்று பொருள் கூறியுள்ளார். தற்போதுள்ள திருவாவினன்குடிக் கோவில் இதுவாக இருக்க முடியாது. சிலர் தற்போது பழனி நகரின் மேற்குப் பகுதியில் உள்ள பெரியநாயகி-

யம்மன் கோவில்தான் பழைய திருவாவினன்குடிக் கோவில் என்றும், அங்குதான் முருகன் வள்ளி தெய்வானையோடு காட்சி தருகிறார் என்றும், அக்கோவிலின் வாயிலுக்கு நேரே உள்ளது முருகன் சந்நிதிதான் என்றும் அம்மன் சந்நிதி தெற்குப்புறமாக ஒதுங்கிக் காணப்படுகிறது என்றும், கூறி அதனால் அக்கோவில் முருகன் கோவிலாக இருந்து பிற்காலத்தில் அம்மன் சிலையைப் பிரதிஷ்டை செய்து பெரியநாயகி அம்மன் கோவிலாக மாற்றிவிட்டனர் என்றும் இவ்வூர்ப் பெரியவர்கள் இப்போதும் கூறுகிறார்கள். இருப்பினும் இக்கோவில் தான் திருமுருகாற்றுப்படை கூறும் திருவாவினன்குடிக் கோயில் என்று உறுதியாகக் கூற இயலாது. ஏனெனில் இங்குள்ள முருகன் வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார்.

மலைமீதுள்ள கோவிலும் திருமுருகாற்றுப்படை கூறும் கோவிலாக இருக்கமுடியாது. ஏனெனில் மலை மேலேயிருக்கும் முருகன் மொட்டையாண்டியாக, தண்டாயுதபாணியாகக் காட்சி தருகிறான். இக்கோயிலின் மூலத்தானத்திலுள்ள முருகன் சிலையைப் நவபாஷாணங்களைக் கொண்டு போகர் என்னும் சித்தர் உருவாக்கினார் என்பர். அவர் காலம் சரியாக இன்னும் கணிக்கப் படவில்லை. ஆரம்பகாலத்திலிருந்தே மலைமீதுள்ள கோயிற் சிலை இப்படித்தான் இருந்ததா அல்லது பழைய சிலையை எடுத்துவிட்டு போகர்தாம் புதிதாகச் செய்த சிலையை அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்தாரா என்று ஏதும் தெளிவாக, உறுதியாகச் சொல்வதற்கில்லை.

வையாபுரி நாடு என்பது இப்போதைய பழனி, கொடைக்கானல் வட்டங்களின் பெரும்பகுதியைக் கொண்டு விளங்கியது. சோழன் பூர்வ பட்டயமும் வையாபுரிப்பள்ளும் வையாபுரிநாடு என்று கூற, கல்வெட்டுக்களும், அருணகிரிநாதர் திருப்புகழும் வைகாவூர் நாடு என்று குறிக்கின்றன. இவ்வைகாவூர்நாடு கொங்குநாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இந்நாட்டில் கல்லாறு, கானாறு, பொருந்தலாறு, பச்சையாறு, பாலாறு, வரத்தாறு என்னும் ஆறு ஆறுகள் ஓடுகின்றன. இவை ஆறும் ஒன்று சேர்ந்து சண்முகநதி என்னும் பெயரில் பழனியின் மேற்குப்பகுதியில் வடக்குநோக்கி ஓடுகிறது.

இப்பழமையான பழனியில்தான் வையாவிக்கோப்பெரும்பேகன் என்னும் கொடைவள்ளல் இருந்தான். இப்பகுதியில் மயில்கள்

மிகுதியாக இருந்தன. ஒரு நாள் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த மயிலைக் கண்ட பேகன் அப்பறவையின் துன்பத்தை உணர்ந்து தானே முன்வந்து தனது விலைமதிப்பற்ற போர்வையை அம்மயிலின் மீது போர்த்தி அதன் துன்பத்தைப் போக்கினான் இதனைப புறநானூற்றில் பரணர்.

''மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக'' (145)

என்று பாடியுள்ளார்.

பெருங்கல்நாடன் பேகன் என்று போற்றப்படும் இவ்வள்ளலின் மனைவி பெயர் கண்ணகி என்பதாகும். பேகன் மனைவியை விட்டுப்பிரிந்து வேறு ஒரு பெண்ணுடன் தங்கியிருந்தான். பிரிவாற்-றாமையில் அவன் மனைவி உள்ளம் நொந்து எப்பொழுதும் அழுது-கொண்டேயிருந்தாள்; எவ்வித ஒப்பனையும் செய்து கொள்ளவில்லை. இதைக் கண்ட கபிலர், பரணர், பெருங்குன்றூர் கிழார், அரிசில் கிழார் ஆகிய புலவர்கள் நால்வரும் பேகனைச் சந்தித்து தனிமையில் வாடும் அவன்மனைவியின் துயர்துடைக்க உடனே இல்லம் செல்லுமாறு வற்புறுத்தினர். அவன் கொடுத்த பரிசிலைப் பெற்றுக் கொள்ளாது அவன் இல்லம் திரும்புவதே தாம் விரும்பும் பரிசில் என்று பாடி-யுள்ளனர்.

பழனிச் சிறப்புக்களைப் பழனித் தலபுராணத்திலும், சோழன் பூர்வபட்டயத்திலும், இவ்வூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களிலும், பழனிப் பள்ளு நூலிலும், திருப்புகழிலும், தண்டபாணிசுவாமிகள் பழனித் திருவாயிரம் என்னும் தொகுப்பிலும், மாம்பழக்கவிச் சிங்க நாவலர் பிரபந்தங்களிலும் விரிவாகக் காணலாம்.

பழனி என்றவுடன் முருகன் கோவில்தான் நினைவுக்கு வரும். பழனி வரலாறு என்பது இவ்வூர் முருகன் கோவில் வரலாற்றோடு இணைந்ததாகும். கோவில் வரலாறென்பது அக்கோவில் உருவான காலம், அதில் நடக்கும் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள், அக்-கோயிலுக்கு வரும் பக்தர்கள், பக்தர்கள் தம் நேர்த்திக்கடன்களைச் செலுத்துதல் முதலான பலவும் அடங்கும்.

முருகனுக்கு நேர்த்திக் கடனைச் செலுத்த விரும்பும் பக்தர்கள் காவடி யெடுப்பது நீண்டகாலமாக இருந்து வருகிற வழக்கமாகும். காவடி யெடுத்து வருவோர் வழிநடைப்பயணம் எளிதாக இருப்பதற்காக முருகன்மீது பக்திப் பாடல்களைப்பாடி வருவர். காவடி யெடுத்துக்கொண்டு இசையுடன் பாடி வரும் பாடல் வழிநடைச் சிந்து எனப்படும். சிலர் காவடியைத் தோளில் வைத்துக்கொண்டு ராகத்தோடும் தாளத்தோடும் பாடியாடுவர் அவ்வாறு காவடியைத் தோளில் வைத்துக்கொண்டு பாடியாடுகின்ற சிந்து (இசைப்பாடல்) காவடிச் சிந்து எனப்படும். காவடிச் சிந்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் காண்பதன் முன் காவடி தோன்றிய வரலாற்றைக் காண்பது பொருத்தமாகும்.

காவு + தடி என்பதே காவடியாயிற்று என்பார் ஏ என். பெருமாள்3. தமிழ்ப் பேரகராதியில் காவு என்பது சிறு தெய்வங்களுக்கு இடும் பலி என்றும் காவுதல் என்பது தோளாற்காத்தண்டு சுமத்தல் என்றும், காவாளர் என்பது காவடி சுமப்போர் என்றும் பொருள் தரப்பட்டுள்ளது. சிலப்பதிகார அடைக்கலக்காதையில் ''மறித்தோள் நவியத்து உறிக் காவாளரொடு'' என்று வருகிறது. புறநானூற்றில் ஔவையார் ''காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை'' என்று பாடுகிறார். இதில் காவினெம் என்ற சொல் தான் பயன்படுத்தும் பொருள்களைக் கட்டித் தொங்கவிடப்பட்ட பையை உடைய தண்டினைத் தோளில் தூக்கினோம்' என்று பொருள்படுகிறது. வள்ளுவரும்

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து

என்று கூறுகிறார். உயிரையே காவடியாகக் கொண்டு இருபக்கங்களிலும் காமமும் நாணமும் தொங்கும் என்பது காவடியின் பயனை வள்ளுவர் காலத்திலும் அறிந்திருந்தனர் என்பதைப் புலப்படுத்துகிறது. 'கா' என்பதே காவடியைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது.

பராசரரின் புதல்வர் அறுவரும் தந்தையின் சாபத்தால் செம்படவராகி, நாரதரின் அருளால் திருப்பரங்குன்றத்தின் சாவணப் பொய்கை மீன்களாகி, முருகனின் அருளால் சாபம் நீங்கப் பெற்றனர் என்று சொல்லும் கதையில் பராசரரின் புதல்வர்கள் முருகனைச் சென்னிமலையில் சென்று வழிபடப்போகும் போது முருகனுக்குரிய

வழிபாட்டுப் பொருள்களை காவடியில் வைத்துச் சென்று முருகனை வழிபட்டுச் சாபம் நீங்கினர் என்று அன்று முதல் முருகனருள் பெறச் செல்வோர் பூஜைப் பொருள்களைக் காவடியில் கட்டிச் சென்று வழிபட்டனர் என்றும் கூறப்படுகிறது, அகத்தியரின் ஏவலால் சத்தி-கிரி, சிவகிரி என்ற இரு குன்றுகளைத் தோளில் இடும்பன் காவடி-யாகக் கட்டித் தூக்கி வந்தான் என்றும், பழனிமலைப் பகுதியில் அப்போது வெறுங்காடாக இருந்ததென்றும், இங்கே இறக்கி வைத்து இளைப்பாறி மீண்டும் குன்றுகளைத் தூக்க முயலும்போது முடியாது உழன்றான் என்றும், முருகன் சிறு குழந்தையாகத் தோன்றி ''இக் குன்றுகள் என்னுடையவை'' என்று சொல்ல, இடும்பன் அவன்மீது பாய, குராமரத்தில் மோதி இறந்தான் என்றும், பிறகு இடும்பனின் மனைவி வேண்டுகோளுக்கிணங்க முருகன் இடும்பனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தான் என்றும், அன்றுமுதல் அக்குன்றுகள் இங்கேயே உள்ளன என்றும், இடும்பனைப் போன்று தன்னை வணங்க வருவோர் காவடி எடுத்து வந்து வணங்கினால் தம் துன்பம் நீங்கப் பெறுவர் என்று முருகன் வரம் கொடுத்தான் என்றும் பழனித் தலபுராணத்தில் சொல்லப்படுகிறது.

முருகனுடைய கோயில்கள் எல்லாம் பெரும்பாலும் மலை-மீதுள்ளதால் பூஜைப் பொருள்களைத் தோளில் வைத்த தண்டின் இரு முனையிலும் தொங்கவிட்டுச் சென்றிருப்பர். கனமான பொருள்-களைத் தோளில் சுமந்து செல்லுதல் எளிது. தோளில் தண்டினை வைத்து அதன் இருபுறங்களிலும் பூஜைப் பொருள்களைத் தொங்க-விட்டுச் சென்ற சாதாரண அமைப்புக்குக் காவடி என்று ஆதியில் பெயர் வழங்கியிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. தற்போது கலையுணர்வுடன் காவடியின் வடிவம் பலவாறு மாறுபட்டுள்ளது.

முருகனுக்கு நேர்த்திக் கடன் தீர்க்கப் பக்தர்கள் எடுத்துச் செல்லும் காவடிகள் முப்பதுக்கு மேற்பட்டவை. பால் காவடி, பன்னீர் காவடி, சர்க்கரை காவடி, பழக் காவடி, தீர்த்தக் காவடி, அக்கினிக் காவடி, நெய்க் காவடி, தைலக் காவடி, விலங்குக் காவடி, வேல் காவடி, கர்ப்பூரக் காவடி, விபூதிக் காவடி, அன்னக் காவடி, இளநீர்க் காவடி, தேன் காவடி, சொர்ணக் காவடி, இரத்தினக் காவடி, தானியக் காவடி, மஞ்சள் காவடி, மாப்பொடிக் காவடி, அவல் காவடி, பாகைக் காவடி, விளக்குக் காவடி, பாவைக் காவடி, பச்சிலைக் காவடி, பாண்டக் காவடி, ஆயுதக் காவடி, பஞ்சவாசக் காவடி, மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, சேவல் காவடி,

முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் எப்பொழுது ஏற்பட்டது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. புராணக் கதைகளை வரலாறாக எடுத்துக்கொள்ள முடியாது. காவடிகள் எடுத்து இறைவனை வணங்கும் வழக்கம் பிற்கால வழக்கே என்கிறார் இரா. வைத்தியநாதன்.4 ஆனால் கு. அழகிரிசாமி ''முருகன் கோவிலுக்குக் காவடி தூக்கும் பழக்கம் முதன் முதலில் எப்பொழுது ஏற்பட்டது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை'' என்று கூறியுள்ளார்.5 இருப்பினும் இவ்வழக்கம் மிகப்பழையது என்று சொல்லமுடியாது என்று கருதி ''இவ்வழக்கம் சமீபகாலத்தில் ஏற்பட்டது; என்றே கருதவேண்டும்'' என்கிறார்.

முருகனைப் புகழ்ந்து பாடும் பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற சங்க நூல்களில் முருகனுக்குக் காவடி எடுத்ததாகக் குறிப்பு இல்லை சங்க காலத்தில் எல்லாம் சுமைகளை எளிதாக எடுத்துச் செல்லத் தோளில் வைக்கப்படும் தண்டினையே காவடியாகப் பயன்படுத்தினர் எனத் தெரியவருகிறது. பழைய இலக்கியங்களில் காவடி என்று வருவதெல்லாம் தோளில் ஒரு தண்டினை வைத்து அதன் இருபக்கங்களிலும் சுமைகளைத் தொங்கவிட்டுச் சென்றதையே குறிப்பதாகும் பிற்காலச் சோழர் காலத்தில் கூட முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை.

பழனி முருகன் கோவிலுக்குச் செட்டி நாட்டிலிருந்து சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்து காவடி எடுத்து வரும் வழக்கம் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. தைப்பூசக் காவடி எடுத்து வருவோர் பல்லாயிரக்கணக்கானோராவர். காவடி எடுத்து வருவோர் விரதம் இருந்து கால்நடையாகவே பழனிக்கு வந்து முருகனை வணங்கிச் செல்வர்.

காவடி எடுக்கும் வழக்கம் கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழரிடையேயும் இருந்து வருகிறது. இது தமிழர் பண்பாட்டின் ஒரு முக்கிய சின்னமாகும். மொரீசியஸ் தீவில் தைப்பூசக் காவடி தேசியத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

காவடிச் சிந்து என்பது ஒரு புதிய யாப்பு வகை. இதனை முதலில் உருவாக்கியவர் அண்ணாமலை ரெட்டியார்தான். 19-ஆம்

நூற்றாண்டில் வாழ்ந்த அவர் கழுகுமலை முருகன்மீது 22 பாடல்களைக் காவடிச் சிந்து யாப்பில் பாடியுள்ளார். அப்பாடல்களின் இனிய சந்தம் யாவரையும் கவர்ந்தது. எனவே அவருக்குப்பின் வந்த பலரும் அச்சந்த யாப்பில் முருகனையும், சிவனையும், திருமாலையும், கருப்பையாவையும், நபிகள் நாயகத்தையும் பாடியுள்ளனர். பாரதியார் பராசக்தியைக் காவடிச் சிந்தில் பாடியுள்ளார். பாரதிதாசன், கண்ணதாசன் போன்றோர் சமுதாயச் சிக்கல்களையும் காதலையும், இயற்கையையும் கூடக் காவடிச் சிந்து யாப்பில் பாடியுள்ளனர். புராணக் கதைகள், காப்பியக் கதைகள், இதிகாசக் கதைகள் எல்லாம் காவடிச் சிந்தில் பாடப்பட்டுள்ளன. இவ்வாறு முருகனுக்குக் காவடி எடுத்துச் செல்வோர் பாடி வந்த காவடிச் சிந்து பல்வேறு சமயத்தவரும் பாடித் தத்தம் கடவுளரை வணங்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பழனியாண்டவன்மீது முத்துக்கறுப்பணன் என்பார் காவடிச் சிந்து நூல் பாடியுள்ளார். இது அச்சில் வெளி வராதது. ஏட்டுச் சுவடியாகக் கேரளப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது. இதில் 75 பாடல்கள் உள்ளன. கார்த்திகைப் பெண்டிர் எடுத்து வளர்ந்தவன் முருகன். தேவர்களின் துன்பம் தீர்த்தவன் முருகன். 'சத்திகிரி சிவ கிரி' ஆண்ட' வன் என்று போற்றி

> ''சக்தியுமை யீன்றருள் செய் பாலா அசுரர்தட்டழிய
> வெட்டி நிலை யிட்ட வடி வேலா
> புத்தியிலாத அடியேன் செய்பிழை பொருத்தருளும்''

என்று வேண்டுகிறார். பக்தர்களுக்கு என்றென்றும் அருள்பாலிக்கின்றவன்; நாளும் அவன் மலையில் காவடிகள் வருவது கண்டு மகிழ்ந்தவன்; அவன் தான் குமரவள்ளல் :

> ''பக்தர்கள் நமக்குதவு பூசை முன்பு
> பாலிப்பே மென்றென்று மென்னுடைய நேசன்
> நித்தியமும் நீபூசை கொண்டு மலையில்
> நீதமாய் வருகின்ற காவடிகள் கண்டு
> வாழுந்திருவௌச் சொலமகிழ்ந்தான் குமரவள்ளல்''

பழனிப்பக்கிரியாபிள்ளை என்பவர் பழனி முருகன்மீது இரண்டு காவடிச் சிந்துக்கள் பாடியுள்ளார். அவை அண்ணமாலை ரெட்டி-

யார் பாடிய காவடிச் சிந்து மெட்டிலேயே உள்ளன. பழனி இளங்கம்பன் அவர்களும், பெ. தூரன் அவர்களும் பிறரும் பழனி முருகன்மீது காவடிச் சிந்துகள் பாடியுள்ளனர்.

இவ்வாறு பழனி வரலாறும் பழனி வரலாற்றில் அடங்கிய காவடிச் சிந்தும் மதுரை வரலாற்றில் அடங்கியதாக உள்ளதை அறியலாம்.

---

1. கி. நாச்சிமுத்து, எம். ஏ.,
சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள்,
ப. 133.

2. அ.ம. பரிமணம்,
முன்னுரை,
வையாபுரிப்பள்ளு,
ப. VI

3. ஏ. என். பெருமாள்,
தமிழக நாட்டுப்புறக் கலைகள்,
ப. 74.

4. இரா. வைத்தியநாதன்,
"கந்தனும் காவடிச் சிந்தும்,"
பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை,
தொகுதி I,
ப. 657.

5. கு. அழகிரிசாமி,
"முன்னுரை",
சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் பாடிய காவடிச் சிந்து,
ப. 13.

# அதிமதுரகவி - ஓர் ஆய்வு நோக்கு

—பண்டிதப் புலவர். திருமேனி நாகராசன். B.Lit. B.Ed
காரைக்கால்

**முன்னுரை**

இது தமிழின் மறுமலர்ச்சிக் காலம். புதிய ஆய்வுகள் பூக்கத் தொடங்கி விட்டன. இன்னமும் இலைமறை கனிபோல மறைந்து கிடக்கும் புலவர் வரலாறும் உண்டு. அவற்றையெல்லாம் இன்றைய ஆய்வாளர்கள் ஆராய்ந்தறிந்து அவனிக்குரைப்பது அவசியமாகும். அவ்வகையில் புதுவை மாநிலத்தினின்றும் புலப்படுத்தப்பட வேண்டிய அரிய செய்திகள் பல உள. பதினைந்தாம் நூற்றாண்டில் காரைக்கால் பகுதியைச் சார்ந்த திருமலைராயன் பட்டினத்தில் சாளுவ மரபினில் தோன்றிய மன்னன் அவைக்களப் புலவர் கூட்டத் தலைவராய்ப் போற்றப் பட்டார் ஒரு புலவர். அவர்தம் வரலாற்றை ஆய்வு நோக்கில் ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்க-மாகும்.

**சாளுவத் திருமலைராயன்**

திரு.மு. அருணாசலம் தமது தமிழ் இலக்கிய வரலாறு-(1519-D) எனும் நூலில் கூறுவது போல் ''13 ஆம் நூற்றாண்டி-லேயே தஞ்சைச் சோழர் ஆட்சி முடிவடைந்து விட்டது. 14 ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் என்ற தில்லி முகமதியப் படைத்தலை-வன் தென்னகம் புகுந்து பாண்டியரை வென்று மதுரையைக் கைப்-பற்றினான். சிலநாளில் விஜய நகரப் பேரரசின் படைகள் முகமதி-யரை விரட்டி மதுரையைக் கைப் பற்றிக் கொண்டன. அதன் பின்னர் மல்லிகார்ச்சுனராயர், விருபாட்சராயர் என்ற ராயர்குல அரசர் இருவர் காலங்களில் நாட்டில் ஓரளவு அமைதி ஏற்பட்டி-ருந்தது. அப்போது விஜய நகர ஆட்சியின் பிரதிநிதியாகத் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்தவன் சாளுவத் திருமலைராயன்''. அவன் தொடக்கத்தில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டிருந்தான். அத்திருமலைராயன் புதிதாக அமைத்துக் கொண்டு அரசாண்ட நகரே இன்றைய காரைக்கால் பகுதியிலுள்ள திருமலைராயன் பட்டினம் என்ற நகரம்.''11

### திருமலைராயனின் சிறப்பு

திருமலைராயன் எல்லாரும் கொண்டாடுகின்ற அழகு அமைந்த சிவந்த நிறத்தினன்; மந்திரமலை போன்ற வலிவான தோள்களைக் கொண்டவன்; வீமன் போன்று பேராற்றல் படைத்தவன்; குடிமக்களைப் போற்றிப் புரந்த செங்கோலன் என்று 'தனிப்பாடற்றிரட்டு' பலபடப் புகழ்ந்து பேசுகிறது.

### திருமலைராயனின் காலம்

சாளுவத் திருமலைராயனின் கல்வெட்டுகள் திருவானைக்கா, திருவரங்கம், தஞ்சை, பாவநாசம், பட்டீச்சுரம் முதலிய ஊர்களில் காணப்படுகின்றன. திருவானைக்கா கோயிலில் ஒன்றும், திருவரங்கம் கோயிலில் ஒன்றும் முறையே கி. பி. 1453, 1463 ஆண்டுகளைச் சார்ந்த இவனுடைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மேலும் தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படுகின்ற இவனது சாசனம் 1455 ஆம் ஆண்டு ஏற்பட்டது. எனவே, இவனுடைய ஆட்சிக் காலத்தை 1453 முதல் 1468 வரை என வரையறுக்கலாம். எனவே, திருமலைராயனின் காலம் 15 - ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் என்பது துணிபு.

### அரசவைப் புலவர்கள்

சாளுவத் திருமலைராயன் புலவர்களைப் போற்றிப் புரந்தவன்; அவன் அவையில் கவித்தேன் பொழியும் கவிவாணர் கூட்டம் ஒன்று இருந்தது. அப்புலவர் கூட்டம் தண்டிகைப் புலவர் என்று அழைக்கப் பட்டதாகக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. அவர்கள் அறுபத்து நான்கு அருந்தமிழ்ப் புலவர். அப்புலவர் கூட்டத்தின் தன்னேரில்லாத் தலைவரே அதிமதுரகவி.

### பெயர்க் காரணமும் சிறப்பும்

அதிமதுரகவி என்பது காரணப் பெயராகும். இனிமையான பாடல்களை அதிகமாகப் பாடி மன்னரை மகிழ்வித்தமையான் அதிமதுரகவி என்பது இவருக்குப் பெயராயிற்று. இவர் புலவர் குழுவின் தலைவர் என்பதொன்றே இவரது சிறப்பைப் புலப்படுத்தும். ஆனால், இவர் பாடியனவாக இரண்டு பாடல்கள் மட்டுமே இன்று காணக் கிடைக்கின்றன.

### கவிஞரின் உயர்நிலை

திருமலைராயனால் நன்கு மதிக்கப்பட்ட அதிமதுரகவி பிறந்த ஊர் திருக்கோவலூர். இவரைப் பொன் போல் பொதிந்து கொண்ட ஊர் திருமலைராயன் பட்டினம். கவிஞர் இல்லம் இன்று நிரவி என வழங்கப்படும் ஊரினில் இருந்ததாக இவ்வூர் மக்களால பேசப்படுகின்றது. ராயன் அதிமதுரகவிக்குப் பொன்னும் பொருளும் மதிப்பும் அளித்துக்காத்து வந்தான்.

### அதிமதுரகவியும் காளமேகமும்

ஒரு முறை அதிமதுரகவி அரசன் அளித்த குதிரையில் தம் மாணாக்கர் புடைசூழ வீதி வழியே பவனி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அக்காட்சியைத் திருமலைராயனைக் கண்டு பாடிப் பரிசில் பெறுதற் பொருட்டுப் பட்டினத்திற்கு வந்திருந்த இளைஞரும் குறும்புக்காரருமாகிய காளமேகம் கண்டார். அதிமதுரகவி-யின் செய்கை அவருக்கு அருவருப்பைத் தந்தது. அப்பொழுது கவிஞரின் முன்னே, ஓடிக்கொண்டிருந்த கட்டியங்காரன் ''அதிமதுர கவிஞர் வருகிறார்; அதிமதுர கவிஞர் வருகிறார்'' என்று கூவிக்-கொண்டே வந்தான். அது கண்ட காளமேகம் ''அதிமதுரம் என்பது ஒரு மருந்துப் பொருள்; அது காரமில்லாச் சரக்கு; அது மற்றப் பொருள்களோடு சேர்ந்தால்தான் பயன்படும்'' என்னும் பொருள்பட

''அதிமதுரம் என்றே அகிலம் அறியத்
துதிமதுரம் ஆயெடுத்துச் சொல்லும்-புதுமை என்
காட்டுச் சரக்குலகிற் காரமில்லாச் சரக்குக்
கூட்டுச் சரக்கெனவே கூறு''

என்று பாடினார். அதனை அவ்வழியே பவனி வந்த அதிமதுரகவி கேட்டு வியந்து சென்றார். செல்லும் பொழுது தம் மாணாக்கருள் ஒருவனை அழைத்து 'அந்த இளைஞன் நிற்கும் கடைக்காரரிடம் சென்று 'மேகம் பசு இரத்தினம்' வேண்டும் என்று கேள்; அதன் பின்னர் நிகழ்வதை எம்மிடம் வந்து கூறு'' என்றார். அம்மாணாக்கனும் விரைந்து வந்து கடைக்காரரிடம் அவ்வாறே கேட்கக் கடைக்காரரோ பொருள் புரியாது விழிக்க அங்கு ஒருபக்கத்தில் நின்றிருந்த காளமேகம் இது தம்மைச் சோதிக்க விடுத்த வினா என்று உணர்ந்து ''கடைக்காரரே!

'மேகம்-பசு-இரத்தினம்' என்பது 'கார்-ஆ-மணி' என்பதே; ஆதலின் அவர்க்குக் காராமணித் தானியத்தைக் கொடுங்கள்'' என்றார். மாணாக்கன் இதனைக் கவிஞரிடம் சென்று சொல்ல அவர் வியப்பு நீங்கி வேதனை கொண்டார்.

மறுநாள் காளமேகம் மன்னனைக் காண அரசவைக்கு வந்தார். அங்கே திருமலைராயன் அரியணையில் வீற்றிருந்த மதியமைச்சரும் தானைத் தலைவர்களும் அவனைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். அதிமதுரகவியோ தண்டிகைப் புலவர்களோடு செம்மாந்து இருந்தனர், அப்பொழுது மன்னவன் காள மேகத்தை வியந்து நோக்க, அதிமதுரகவி முகம் சுளிக்க, புலவர்கள் மனம் மாறுபட, மற்றவர்கள் விழித்துப் பார்க்கத் தம்மை ஒருவரும் மதியாமையை அறிந்து மனம் வெகுண்ட அவர் கலைமகளின் அருளினை வேண்டிக் கவிபாட அவ்வளவில் மன்னவன் அமர்ந்திருந்த அரியணை வளர்ந்து இடம் அளிக்கக் காளமேகம் அதனில் அமர்ந்து கொண்டார். மன்னவன் வியப்புக்கோர் அளவில்லை. உடனே அரசனின் கவனத்தை ஈர்க்கவும் காளமேகத்தை வெருட்டவும் நினைந்த அதிமதுரகவி

''மூச்சு விடுமுன்னே மூந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே உன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு''

இவ்வாறு பாடினார். மூச்சை இழுத்து வெளியே விடுவதற்குள் முந்நூறு என்றும் நானூறு என்றும் பாட்டுப் பாடுவாராம் அதிமதுர கவி. அம்மட்டோ? ''ஆச்சு'' என்று சொல்லி முடிப்பதற்குள் ஐந்நூறு பாட்டுகள் பிரவாகமாகப் பொங்கி வந்திடுமாம். இனிமையாகப் பாடுவது மட்டும் அன்று. கண்ணிமைக்கும் நேரத்திலும் கவிபொழியும் ஆற்றலினராய் அதிமதுரகவி விளங்கினார் என்பதும் தெளிவு.

அவர் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இயம்பி நின்றார். காளமேகம் அஃது இது:-

''இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதா - சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யாயின்
பெருந்தாரை மேகம் பிளாய்''

திருமலைராயன் காளமேகத்தைப் பெரிதும் கொண்டாடத் தலைப்பட்டான். மனம் பொறுக்காத மதுரகவி மன்னனை நோக்கி ''அரசே! இஃது உண்மைக் கவிஞர்க்கு உரிய செயல் அன்று; இது கண்கட்டு வித்தையே! இவரை அரிகண்டம் எமகண்டம் பாடச் செய்வோம்; வென்றால், உயர்வு செய்து போற்றுவோம்'' என்றார். இதனால் அரிகண்டம் எமகண்டம் பாட அதிமதுரகவி அறிந்திருந்தார் எனலாம். எனினும் இக்கருத்துக்கு வலுவான சான்று இல்லை.

### அரிகண்டம் எமகண்டம்

அரிகண்டம், எமகண்டம் பற்றிப் பல்கலைப் புலவர் தெ. பொ. மீ. அவர்கள் 'ஆசுகவி' என்ற கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ''கத்தி கட்டிப் பாடுவது தவறினால் எதிரி கயிற்றினை இழுத்ததும் தலை துண்டமாகும்; இஃது அரிகண்டம். அடியே நெருப்பு; அதன் மேல் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரை; அதன்மேல் தொங்கும் உறியில் பாவலன் தன் கழுத்திலும் இடுப்பிலும் கத்தி கட்டிக் கொண்டு நிற்றல்; கத்தியைச் சங்கிலியிற் கோத்து ஒவ்வொரு யானையும் தன் தன் துதிக்கையிற் பிடித்திருத்தல்; கொடுத்த சமிக்கை படி பாடாமற் போனால் யானை இழுத்தல்; புலவன் துண்டு துண்டாய் வெட்டுண்டு எண்ணெயிற் பொரிந்து விடுதல் — இது தான் எமகண்டம்.''

### கவிஞர்களின் தோழமை

அதிமதுரகவியும், தண்டிகைப் புலவர்களும் கொடுத்த சமிக்கையினைக் கொண்டு, தங்கு தடையின்றி தண்டமிழ்க் கவிபாடி அரிகண்டத்திலும் எமகண்டத்திலும் வென்று நின்றார் காளமேகம், மன்னவன் திருமலைராயன் காளமேகத்தை ஒப்பற்ற புலவராக ஏற்று உயர்வு செய்தான். அதிமதுரகவியும், காளமேகத்தின் புலமையைப் போற்றி அவரோடு தோழமை பூண்டார். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் அன்றோ?

திருமலைராயனின் அவையைச் செங்கதிரும் தண்ணிலவும் போலக் காளமேகமும் அதிமதுரகவியும் அலங்கரித்தனர். அவ்வப் பொழுது திருவாரூர் போன்ற பல திருத்தலங்களுக்கு இணைந்து சென்றே இறைவழிபாடு செய்தனர். இஃது இவ்வாறாக அதிமதுர கவியும் காளமேகமும் இறுதிவரையில் முரண்பட்டிருந்தனர் என்னும் சிலரது கூற்றுக்குத் தக்க சான்று ஏதும் இல்லை. இவ்விரு புலவர்களுள் முதலில் இறைவனின் திருவடி நிழலை எய்தியவர் காளமேகமே. அப்பொழுது கருத்தழிந்து கசிந்து கண்ணீர் வார்ந்து அதிமதுரகவி பாடிய கையறுநிலைப் பாடல் இது:-

''வாசவயல் நந்தி வரதா திசையனைத்தும்
வீசுகவி காள மேகமே -பூசுரனே
விண்தின்ற வெவ்வழலில் வேவதோ ஐயகோ
மண்தின்ற பாணமென்ற வாய்''

—தமிழ் நாவலர் சரிதை

முடிவுரை

திருக்கோவலூரில் பிறந்து தம் தீந்தமிழ்ப் பாட்டின் திறத்தால் திருமலைராயனின் அவையில் தலைமைப் புலவராய் விளங்கிக் காளமேகத்தொடு முதலில் முரண்பட்டுப் பின்னர் அவரொடு தோழமை பூண்டு எண்ணற்ற பாடல்களைப் பாடியிருப்பினும் அவையெல்லாம் காலவெள்ளத்தில் அழிந்து விட இரண்டே இரண்டு பாடல்களால் கற்றவர் உள்ளங்களில் இடம் பிடித்துள்ள அதிமதுரகவி போற்றற்கு உரியவரே!

(நன்றி; பாண்டிச்சேரி வானொலி நிலையம்)

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்து மெரி பொருந்துவிடந் தெரிந்திடாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணியெவர்க்குந் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழிற் கமலைவேந்தன்
கருணைமழை பொழியுமிரு கடைக்க ணாளன்
பார் புகழும் ஞானசம்பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்

சம்பந்த சரணாலயர்

# பாவேந்தர் கவிதைகளில் சிலம்பின் செல்வாக்கு

டாக்டர் : வே. சாத்தையன், M O.L.Ph.D.
தமிழ்ப் பேராசிரியர் பூண்டி

பாவேந்தர் பாரதிதாசன் தமக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களில் முழுமைத் தோய்வுடைய பாவலராவர். மரபு வழிக் கவிஞராய இவர்தம் கவிதைகளில் பழந்தமிழ் நூல்களின் செல்வாக்கு சீரிய இடம் பெற்றுச் சிறத்தலை அறியலாம். பழந்தமிழ் இலக்கியங்களில் பாரதிதாசன் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டின் விளைவாக சில நூல்களே அவரிடம் தோன்றலாயின. பிசிராந்தையார் நாடகம், கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை, வெண்பா, பாரதிதாசன் ஆத்திச் சூடி ஆகியவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

இளங்கோவடிகள் திங்கள், ஞாயிறு, மழை ஆகிய இயற்கையினைப் போற்றித் தம்நூலைத் தொடங்கியுள்ளார். திங்கட்குச் சோழ மன்னன் வெண் கொற்றக்குடையினையும், ஞாயிற்றுக்கு அவன் ஆணைச்சக்கரத்தையும் உவமை கூறி வாழ்த்திய இளங்கோவடிகள் மழைக்கு சோழனின் அளியை (கொடையை) உவமையாக்கி

'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலியுலகிற் கவன் அளிபோல்
மேனின்று தான் சுரத்தலான்' (1 : 7)

என்று போற்றுகின்றார்.

இயற்கையின் நலமும் அதுதரும் வாழ்க்கை வளமுங் குறித்த இளங்கோவின் தொடர்களைச் சிறிதும் மாற்றமின்றி பாரதிதாசன்,

'மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி
உலகுக் கவனளி போல்
மேல் நின்று தான் சுரத்த
லான்' என்றிளங் கோ
தானுரைத்த செய்யுள்'

(—கவிதைகள் : 3-ஆம் தொகுதி)

என எடுத்தாண்டு சிலம்பின் பால் தமக்குள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்தி இயற்கையை வாழ்த்துகின்றார்.

தென்றல் பற்றிய குறிப்புக்கள் சங்க நூல்களிற் காணப்பட்டாலும் தென்றல் வழங்கும் இன்பமும் வளமுங்குறித்து அதனைப் பாடு பொருளாக்கிய பாங்கில் சிலப்பதிகாரம் முதலிடம் பெறுகின்றது. பொதிய மலையிற் பிறந்த தென்றல் புலவர் போற்றும் பெருமையுடன் விளங்குதலை அடிகளே தெளிவாகக் குறிப்பிடுகின்றார். மதுரைத் தென்றலின் மணச் சிறப்பினைக் குறிப்பிடும் இளங்கோவடிகள், அகிலின் சாந்து, குங்குமக்குழம்பு ஆகிய கொழுஞ் சேற்றில் தவழ்ந்து மலர்களும் மாலைகளும் நிறைந்த பூவணை பல பொருந்தி அட்டில் மணமும் அங்காடி நாற்றமும் ஈட்டி, பல்வேறு மணப்புகைப் பாங்குறக் கலந்து, பாண்டியன் கோயிலில் நுகர்ந்தார் உள்ளத்தையும் உயிரையும் ஈர்க்கும் நறுமணக் கலவையின் இனிய மணத்தையும் கொண்டு மதுரைத் தென்றல் வந்ததாக இளங்கோவடிகள் கூறுகின்றார். மலையத்தில் குளிர்ந்தும் அங்கு மலர்ந்த மலர்களின் இனிய மணத்தினை உண்டும், மலர்த்தேன் மாந்திய வண்டுகளின் இன்னோசைப் பாடல்களில் கேள்விச் செல்வமாகிய அறிவு பெற்றும் வருகின்ற தென்றலை வாழ்த்தி வரவேற்கும் 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் வரும் ஒரு பாடலுக்குரிய மூலக்கருவாய்ச் சிலம்பின் கருத்துக்கள் உள்ளன எனலாம்.

மாலைப் போதில் அலரும் மலர்கள் பலவாதலால் அக்காலத்தில் உலவுந் தென்றலில் மண நலம் மிக்கிருத்தல் இயல்பு. மணஞ் சான்ற அத் தென்றலைச் சிறுகாற் செல்வனாக உருவகஞ் செய்து, மணம் பரப்பும் அவன் செயலை

'அறுகாற் றுறும் பெறிந் தரும்பு பொதிவாசம்
சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற'' 6 (4:17)

என இளங்கோவடிகள் மலர்களில் மதுவுண்ணும் வண்டினத்தை ஓட்டிய தென்றல் அவற்றில் நிறைந்த மணத்தை அள்ளி எங்கும் பரப்புவதாகக் குறிப்பிடுகின்றார். இயற்கையின் இனிய விளையாடல் குறித்த இத்தொடர்கள் இயற்கைத் தோய்வுடைய பாரதிதாசன் உள்ளத்தில் தங்கி சிறு மாற்றமுடன் காதற்பாடல்கள் எனும் தலைப்பில்

'மாலையிலே முல்லை மலர்ப் பொடியைத் தானள்ளிச்
சோலையெலாம் வண்டிருந்து சூறையிடும் தென்றலிலே'

என ஒலிக்கின்றது.

சிலம்புத் தென்றல் மலரில் தேனுண்ணும் வண்டுகளை ஓட்டி மலர் மணத்தைக் கொள்ளை கொண்டு மறுகில் தூற்ற, பாவேந்தர் கவிதை காட்டும் தென்றலுக்கு அதன் வண்டுத் தோழர்கள் மலரின் மலைப் பொடியைத் தாமே அள்ளிக் கொட்டுவதை மனக் கண்ணால கண்டு மகிழலாம.

சோழ நாட்டு நிலவளத்தைத் தன் நீர்வளத்தால் செழிக்கச் செய்யும் காவிரியின் சிறப்பைப் பழந்தமிழ் நூல்கள் பாராட்டுகின்றன. அச்சிறப்புக் குறித்தே சோழ மன்னன் காவிரி நாடன் என அழைக் கப்படுவான். வெள்ளக் கடுவிசை தவிர்ந்து, மென்னடை கொண்டு காவிரிப்பெண் நன்செய் குழவிகட்கு பாலூட்டிச் செல்லும் நீர்மையை

''உழவரோதை மதகோதை
உடை நீரோதை தண்பதங் கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி''

என்று இளங்கோவடிகள் வாழ்த்துகின்றார். ஆற்றின் புதுப்புனல் பெருக்கால் பசியான நோயும் பகையான வறுமையும் நீங்க மக்கள் யாவரும் மகிழ்ந்த நிலையை

... ... ... ... ...
... ... ... ... ...
... ... ... ... ...
... ... ... ... ...
சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய் நடக்கின்றாள் வையம்
தழைகவே தழைக என்றே

என்ற அழகின் சிரிப்புத் தொடர்களில் சிலம்பின் செல்வாக்கு வெளிப்படுகின்றது. சிலம்படி குலுங்க எனக் கவிஞர் கூறுவதில் தமிழ்த்தாயின் பொன்னடி பூண்ட (இளங்கோவடிகளின்) சிலம்பின்

சிறப்பும் அதன்பால் பாரதிதாசன் கொண்ட தோய்வும் தெரிகின்றது.

ஞாயிறும் திங்களும் இயற்கை படைத்த மூல ஒளிப் பொருள்கள். இயற்கையின் ஒளி மண்டலமாக விளங்கும் இவை முறையே பகலிலும் இரவிலும் உலகுக்கு ஒளி வழங்கி நலஞ் செய்யும் இயல்பின. இப் பேரியற்கை இரண்டும் இணைந்து மக்கள் தம் கட்புலனுக்குக் காட்சியளித்தல் நடைமுறை வாழ்வில் இல்லை. கற்பனைக் கண் கொண்ட கலைஞர் இவற்றை ஒருங்கே காண்பதும் காட்டுவதும் கலையுலகில் உண்டு. கோவலனும் கண்ணகியும் பள்ளியுள் சேர இருந்த எழிற்கோலச் சிறப்பினை இளங்கோவடிகள்

> "முதிர்கடல் ஞாலமுழுவதும் விளக்கும்
> கதிரொருங்கிருந்த காட்சிபோல" (2 : 30)

எனக் காட்டியுள்ளார். இதனை இல்பொருள் உவமை என்று இலக்கண உலகம் ஏற்றுப் போற்றும். கதிரொருங்கிருந்த இக்கவின் காட்சியில் திளைத்த பாரதிதாசன் தம் குடும்ப விளக்கில் நகைமுத்தும் வேடப்பனும் மணவறையில் வீற்றிருந்த எழிற்சிறப்பினை

> "முழுநில வழகொழுகு முகமும், மற்றும்
> எழுந்த பரிதிநேர் ஆணழகு முகமும்
> இருப்பது காட்டி இறுமாப்புற்றது"

எனக்குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரத்தின் இவ்வரிய உவமை பாவேந்தர் கருத்தில் பதிந்து ஏற்ற இடத்தில் பொருந்தி செப்மாப்படைகிறது.

உயிரினங்களின் பொதுமை நாட்டமாகவும் உலக வளர்ச்சிக்கான உயிர்க் கொடை வழங்கும் அரும்பண்பாகவும் விளங்கும் காதலுணர்வின் தேவனாகக் கருதப்படும் காமவேளின் ஆட்சியினை இலக்கியங்கள் சுட்டுகின்றன கலையுலகம் கண்ட இக்காதற்கடவுளுடன் இளவேனில், தென்றல், குயில், கரும்பு, வண்டு, மலர், மகர மீன் ஆகியன இணைத்துக் கூறப்படும். காமவேளின் கட்டளைக்குட்பட்ட படை மறவனாகும் குயில், ஊடல் கொண்ட காதலரை நோக்கி ஊடல் நீங்கி யாவரும் களிமின் என்று வேளின் ஆணையினை அறிவிப்பதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். (குயிலின் இனியபாடல் காதலன்பைத் தூண்டும் என்பது கருத்து)

தனித்த தலைவியின் கூற்றாகப் பாவேந்தர்,

''கூடின இன்பக் குயில்கள்
கூடினோர் பிரிதல் வேண்டாமென்று - (தேனருவி)

எனக் குறிப்பிடுவது சிலம்பின் செல்வாக்கில் எழுந்த கூற்றெனலாம்

இளவேனில் ஆண்டின் இனிய பருவமாகும். இயற்கை எழிற் கோலம்பூணும் அப்பருவத்தின் வரவைத் தென்றலாகிய தூதன் குயிலாகிய எக்காளம் ஊதிக் காதலர்க்கு அறிவித்ததாக இளங்கோ-வடிகள்

'கொடிமிடை சோலைக் குயிலோ னென்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற' (8:12)

என்று கூறுகின்றார். பாவேந்தர் தம் பாண்டியன் பரிசில் மேற்கண்ட கருத்து

'............குயிலினங்கள்
திருச்சின்னம் ஊத, நறுந்தென்றல் வீசச்
செவ்வடியார் அன்னம் உலாவரும்......'

என இடம்பெற்று வேழநாட்டு இயற்கை வருணனையாகப் பொலி-கின்றது. பெண்கள் தம் கடமையைக் குறிப்பிடும் பாரதிதாசன்.

'மேகலையும் நற்சிலம்பும் பூண்டு - பெண்ணே
வீழ்ச்சியும் சூழ்ச்சியும் தாண்டு' —(இசையமுது)

எனத் தமிழக மகளிர் சிலம்பு மேகலை ஆகிய நூல்களைக் கற்பது அவர்தம் வாழ்க்கை வெற்றிபெற வழிவகுப்பதாகும் என்று குறிப்-பிடல் கருதத் தக்கது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற சில கவிதை அடிகள் பாவேந்-தரால் எடுத்துக்காட்டாக அவ்வாறே பின்பற்றப்பட்டுள்ளன. சில இயற்கை வருணனைகள் மாற்றமின்றியும் சில சிறு மாற்றமேற்றும் இடங்கொண்டு விளங்குகின்றன. சிலம்பின் கவிதைக் கருத்துக்கள் சில செல்வாக்காகவும், சில பாவேந்தர் படைப்பின் கருவாகவும்

அமைந்து பொலிகின்றன. பாவேந்தர் கவிதைக் கருத்துக்கள் சில சிலம்பின் எதிரொலி போன்றும் ஒலிக்கின்றன. இவ்வாறு இளங்கோவடிகள் படைப்பினைப் பாரதிதாசன் பலவகையிலும் பயன் கொண்டு சிலப்பதிகாரத்தின் பால் தமக்குள்ள பற்றையும் பயிற்சியையும் புலப்படுத்தியுள்ளார்.

---

## இறைவன் வாழும் இடம்

"தஞ்சை மணவழகன்"

எங்கு உள்ளான் இறைவ னென்று
தேடி விழிக் கிறான்—மனிதன்
எங்கெல் லாமோ தேடித் தேடிப்
ஓடி இளைக் கிறான்!
மங்க லமாய்த் தீபம் ஏற்றி
மனதில் துதிக் கிறான் — நித்தம்
மண்டி யிட்டும் மனந்தி றந்தும்
வருந்தித் துதிக் கிறான்!
(எங்கு ...)

அன்பு கொண்ட நெஞ்சங் களில்
அவனும் வாழ்கின்றான்—இதை
அறிந்தி டாமல் சிலமனிதர்
மனமும் நோகின்றார்!
பண்பு பாசம் நீதி நேர்மை
உள்ள பேர்களைத்—தேடிப்
பார்த்து அந்த உள்ளங் களில்
அவனும் வாழ்கிறான்!
(எங்கு)

துன்ப முற்ற ஏழை களின்
துயர்து டைத் துமே—உழைப்பில்
இன்பம் காணும் ஏழை மக்கட்
சேவை செய்திடும்
தொண்டு உள்ளக் கோயில் களைச்
சார்ந்து வாழ்கிறான்—இறைவன்
தூய்மை வாய்மை கொண்டநெஞ்சில்
தோய்ந்து வாழ்கிறான்!
(எங்கு ...)

# பழம்பெரும் பதிப்பாசிரியர்

பழநி அரங்கசாமி
மதுரைப் பல்கலைக்கழகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலம். ஏடும் எழுத்தாணியுமே எழுது கருவிகள். அச்சும் தாளும் அறிமுகம் ஆகாத நிலை நம்மனோர் இற்றைநாள் பயின்று மகிழும் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஓலைச்சுவடிகளாக இருந்தன. பாரம்பரியமாகக் கல்வி பயின்றோரின் இல்லங்களில் செல்லரித்தும், சிதிலமடைந்தும் அவை மக்கி மடிந்து கொண்டிருந்தன. அச்சடிக்கும் கலை அப்போது தான் தொடக்க நிலையில் இருந்தது அதனைப் பயன்படுத்தி பண்டைத்தமிழ் இலக்கியங்களை அச்சேற்றுகின்ற பெரும் பணியில் ஈடுபட்ட தமிழறிஞர் வெகுசிலரே. தமிழகத்தைப் பொறுத்தவரையில் எல்லோரும் பதிப்புக் கலையில் நினைவு கூர்வது உ.வே. சாமிநாத அய்யரைத்தான். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரும் பழைய நூல்களைப் புதுவதாகப் பதிப்பித்தவர்களே. இருப்பினும், இவர்கள் அனைவரிலும் தொல்காப்பியத்தை முழுதும் பதிப்பித்து அந்த அருந்தமிழ்ப் பெரும்பணியை சிறப்புறச் செய்த சி. வை. தாமோதரம் பிள்ளையை தமிழுலகம் ஏறத்தாழ மறந்து விட்டது என்றே கூறலாம்.

பழம்பெரும்பதிப்பாசிரியர்என்பதேயன்றிதாமோதரம் பிள்ளைக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரி. 1857-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் அதற்கு அடுத்த ஆண்டிலேயே முதன் முதலாகத் தேர்வு நடந்த போது இலங்கையிலிருந்து வந்து தேர்வு எழுதியவர் இருவர். டேனியல் விசுவநாதம் பிள்ளை இரண்டாம் நிலையும், தாமோதரனார் முதல் நிலையிலுமாகத் தேர்வு பெற்றனர். தமிழிலக்கிய இலக்கணங்களைப் பழுதறக் கற்பதோடு, சித்தாந்தத்தையும் நுணுகிக் கற்பதில் யாழ்ப்பாணத் தமிழர்கள் பின்னடைந்தவர் அல்லர். வி, கனகசபை, மயில்வாகனம் எனும் பெயரிய சுவாமி விபுலாநந்தர், நவாலியூர் கந்தசாமி, புன்னாகம் குமரசாமி ஆகியோர் இதற்குச் சான்று. சி.வை. தாமோதரம் பிள்ளையும் இச்சிறப்புப் பட்டியலில் முதலிடம் பெறத் தக்கவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பத்து கல் தொலைவில் உள்ள சிறு பிட்டி எனும் ஊரில் வைரவநாத பிள்ளை - பெருந்தேவியம்மாள் தம்பதியருக்கு 1832-ஆம் ஆண்டில் தலைமகனாகப் பிறந்தவரே தாமோதரம் பிள்ளை. தமிழிலக்கியச் சுவையை இவர் ஊன்றி உணர்தற்குக் காரணமாய் இருந்தவர் சுன்னாகம் முத்துக்குமரக் கவிராயர். தொல்காப்பியப் பதிப்பில் கவிராயரை நினைவு கூர்ந்து தாமோதரனார் எழுதியுள்ள சிறு கவிதையே இதற்குச் சான்று.

சுன்னை முத்துக்குமாரன் றுணைக்கழல்
சென்னி நாவொடு சிந்தை திருந்தவைத்
தன்ன மூதறிவாளர் பதந்துதித்
திந்நி லத்திவ் வுரை யின் றியம்புகேன்

கிராமத்திலேயே ஆரம்பக்கல்வி பயின்ற பின்னர் 1844-ல் பட்டிக்கோட்டா எனுமிடத்தில் ஆங்கிலக் கல்வியும் அறிவியல் படிப்பும் தொடர்ந்தது. இக்கல்வி நிலையம் அமெரிக்கப்பாதிரியார் களால் தொடங்கப்பட்டது. மாணவனாகப் பயிலும்போதே இவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமை கண்டு வியப்புற்ற ஆசிரியப் பெருமக்கள் இவரைப் பண்டிதர் என்று அழைப்பது உண்டு 1852-ஆம் ஆண்டு ஆங்கேயே ஆசிரியராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் கிறித்தவப் பிரச்சாரம் செய்து, பின்னர் சென்னைக்கு வந்த பெர்சிவால் பாதிரியார் 'தினவர்த்தமானி' என்ற பத்திரிகையை 1853-ல் தொடங்கினார். இதுவே தமிழகத்தின் தலை நகரில் தொடங்கப்பட்ட முதல் தமிழ்ப்பத்திரிகை. 21-வயது நிரம்பிய இளைஞர் தாமோதரனாரையே பாதிரியார் அழைத்து பத்திரிகை ஆசிரியராகவும் நியமித்தார். யாழ்ப்பாணத்தமிழர் அப்போது தான் தமிழகத்துக்கு வருகிறார். தினவர்த்தமானி முதல் மூன்று ஆண்டு கள் நாளிதழாகவும் 1856-ஆம் ஆண்டு தொடங்கி வார இதழாகவும் வெளியிடப்பட்டது. பத்திரிகைப் பணியில் இருந்தபோதே பற். பல ஆங்கிலப் பாதிரிகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொண்டினையும் தாமோதரனார் செய்து வந்தார். ஆங்கிலேயரோடு தொடர்பு இருந்-தாலும், தமிழ்ப்பற்றிலும், சைவ நெறியிலும் இவர் யாருக்கும் சளைத்தவரல்லர். சைவநிந்தை பொறாத ஆறுமுக நாவலரின் பால் தாமோதரனார் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். ஒப்பாரும் மிக்-காரும் இல்லாத நாவலர் பொருமான்'' என்றே அவரைக் குறிப் பிடுவது இவரது வழக்கம்.

சென்னைக் கடற்கரையில் அமைந்துள்ள மாநிலக் கல்லூரியில் தாமோதரனார் தமிழ் ஆசானாக அமர்த்தப்பட்டார். பின்னர் கள்ளிக் கோட்டை அரசினர் பள்ளிக்கு முதல் நிலை ஆசிரியராகச் சென்றார். கணிதப் புலமையும் மிக்கிருந்தமையான். அன்றைய அரசு இவரை ஆடிட்டராக நியமித்தது. ஆசிரியர் பதவியினின்றும் விலகி, கணக்-கராகப் பணியாற்றும் போது 1871 - ஆம் ஆண்டு தாமே பயின்று வழக்கறிஞர் தேர்விலும் வெற்றி பெற்றார். பின்னால் வழக்கறிஞ-ராகப் பணியாற்றுவதற்கு இதுவே அடிப்படையாக அமைந்தது

பல்துறை அறிவும் பெற்றிருந்தாலும், தமிழ் இலக்கண, இலக்-கியத்தின் பால் இருந்த ஈடுபாடு குறைந்திடவில்லை. ஆறுமுக நாவ-லரின் அடியொற்றி பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியினை தாமோதரனார் தொடங்கினார். 1860-ஆம் ஆண்டு திருக்குறளையும், அதற்கு அடுத்த ஆண்டில் திருக்கோவையாரையும் அச்சுக்குக் கொண்டு வந்த ஆறுமுக நாவலரே பதிப்புப் பணியில் தாமோ தரனாரை ஈடுபடுத்தினார் என்று தெரிகிறது.

தொல்காப்பியம் இரண்டாம் பகுதியாகியசொல்லதிகாரத்திற்கு எழுதப்பட்டவற்றுள் நச்சினார்க்கினியர், சேனாவரையர் ஆகிய இருவரது உரைகளே சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. அவருள்ளும் வடநூற்கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையரது விளக்க உரையே மிகச்சிறந்தது எனலாம். இந்த இரண்டு உரைநூல்களை-களையும் தனித்தனியே முதன்முதல் 1868 - ஆம் ஆண்டு தாமோத-ரனார் பதிப்பித்தார்.

''தொல்காப்பியம் என்னும் இலக்கணத்தை முதலில் அச்சிட்டு வெளியிட்டவர், சைவ மகத்துவம் கட்டளைக் கலித்துறை முதலிய செய்தவர்'' என்று அபிதான சிந்தாமணி இவரைப்பற்றிக் குறிப்பிடுகிறது. சி. வை, தாமோதரனார் ஓலைச்சுவடியிலிருந்து முதன்முதலாக அச்சுக்குக் கொண்டு வந்த பிறநூல்களும் வெளியிடப் பட்ட ஆண்டுகளும் சீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| வீரசோழியம் | — | 1881 |
| தணிகைப் புராணம் | — | 1883 |
| தொல்காப்பியம் (பொருளதிகாரம் | — | 1885 |
| கலித் தொகை | — | 1887 |
| இலக்கண விளக்கம் | — | 1889 |

வீரசோழியம் என்னும் இலக்கண நூல் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் விக்கிரம சோழன் காலத்தில் இயற்றப்பட்டதாகும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக இருந்த தவத்திரு. பெரிய சற்குருநாதசாமி என்பாரே வீரசோழியத்தின் ஓலைச்சுவடியைக்கொடுத்து உதவியவர். கச்சியப்ப முனிவரின் தணிகைப்புராணச் சுவடிகள் மூன்று கிடைத்தன. அவற்றைப் பொறுமையுடன் ஒப்புநோக்கி பிழை திருத்தி, படி எடுத்து அதற்குப்பின்னரே தாமோதரனார் அப்பிரதியை அச்சுக்குக் கொடுத்திருக்கிறார். தொல்காப்பியத்தின் எழுத்தும் சொல்லும் வெளி வந்து பதினாறு ஆண்டுகள் ஆகிவிட்டன. பொருளதிகாரம் என்ற பெரும் பிரிவு தொல்காப்பியத்தின் ஒரு பகுதியே என்பது கற்றுவல்லோர்க்குத் தெரிந்த உண்மை தான். ஆனால் அதனைப் பதிப்பித்து அச்சிலிட யாரும் முயற்சி எடுத்ததாகத் தெரிந்திலது. தாமோதரம் பிள்ளை தமிழகம் எங்கணும் அலைந்து திரிந்து கிடைத்த ஏடுகளைக் கொண்டு தொல்காப்பியப் பொருளதிகாரத்தைத் தாமே முன் வந்து வெளியிட்டார்.

கலித்தொகையினை அச்சுக்குக் கொண்டு வரும் போது குறையாகவும், முழுதுமாகவும் இவருக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகள் பத்து. கடிதம் எழுதியும், நேரில் பல இடங்களுக்குச் சென்றும் பற்பல மாதங்கள் முயன்றிருக்கிறார். திருத்தணிகை, சென்னை, திண்டிவனம், மஞ்சக்குப்பம், திருவாவடுதுறை, புதுக்கோட்டை ஆகிய பல்வேறு இடங்களுக்கும் சென்று ஏடுகளைத் திரட்டியிருக்கிறார். இப்பணியில் ஏற்பட்ட பொருட்செலவுகளுக்கு ஈடு செய்தும் ஏடுகள் கிடைக்கத் தம்மாலான உதவிகளும் செய்தவர் சற்குருநாத சாமிகளே ஆவார். ''காருண்ணியமும் கலாபரிபாலனமுமே தமது திருமேனியாகக் கொண்டு விளங்கும் திருவாவடுதுறைச் சற்குருநாத சுவாமிகள்'' என்று இவரைப்பற்றித் தமது கலித் தொகை முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

தாமோதரனார் பதிப்பித்து வெளியிட்ட இலக்கண விளக்கம் திருவாரூர் வைத்தியநாத நாவலரால் எழுதப்பட்டது. இது தொன்னூலுக்குப் பிற்காலத்ததே ஆயினும், சிறந்த இலக்கண நூலாகக் கருதப்பட்டது. ஓலைச் சுவடியாகத் திருவாவடுதுறையில் இருந்த இதனைத் தாமோதரனார் வெளியிடுவதற்கு பொருள் உதவி செய்தோர் சிதம்பரம் நாவலர் அறநிலையத்தைச் சேர்ந்த சதாசிவம்

பிள்ளையும், மாநிலக்கல்லூரியில் பணி புரிந்த கனகசுந்தரம் பிள்ளையும் ஆவர்.

பல்வேறு வகைப்பணி புரிந்தாலும் பொருளாதார நெருக்கடியினூடே ஏடுகளை அச்சுக்குக் கொண்டு வரும் அரிய தொண்டினைத் தாமோதரனார் தொடர்ந்து செய்து வந்தார். அன்றைய புதுக்கோட்டை அரசின் கீழ் 1877 முதல் மூன்று ஆண்டுகள் உயர் நீதி மன்ற நடுவராகப் பணியாற்றினார். ஓய்வு பெற்றதும் தமது பெண் மக்கள் இருவரது திருமணத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சென்று, மீண்டும் சென்னைக்கு வந்து புரசவாக்கம் பகுதியில் தங்கியிருந்தார். சென்னைப்பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டக்குழுவிலும், தேர்வுகள் நடத்துவதிலும் உறுப்பினராகச் செயலாற்றினார்.

தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் இவராற்றிய பணிகளைப் பாராட்ட விரும்பிய சென்னை அரசினர் 1895-ஆம் ஆண்டு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் அளித்தனர். புதுகோட்டை, திருவிதாங்கூர் மன்னர்கள் தாமோதரம் பிள்ளைக்குத் தனி மதிப்பு அளித்துப் பாராட்டினர். கடைசிக்காலத்தில் பற்பல பண்டிதர்களை அமர்த்தி அகநானூறு பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். சூளாமணி எனும் தமிழ்க்காப்பியத்தினை உரைநடையில் எழுதினார். இறுதி வரை இலக்கியப்பணிக்கே தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இத்தமிழறிஞரை இயற்கை விட்டு வைக்கவில்லை. 1901 - ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதலாம் நாள் வைகுந்த ஏகாதசி அன்று புரசவாக்கம் வெள்ளாளர் தெருவில் தமது இல்லத்தில் காலமானார். கழுத்தில் உருத்திராக்க மாலையும் நெற்றியில் திருநீறும், குங்குமமும் அணிவிக்கப் பெற்றஅவரது பூதவுடல் தேவார, திருவாசக முழக்கத்தோடு அடக்கம் செய்யப்பட்டது. புரசவாக்கம் கங்காதீஸ்வரர் ஆலயத்தில் பதினாறம் நாள் சடங்குகள் நடந்தபோது, தமிழறிஞர்கள் பலர் அங்கு கலந்துகொண்டு இத்தமிழறிஞருக்கும் புகழ்மாலை பாடினர். இவரது மாணவராக இருந்த வி. கோ. சூரியநாராயண சாத்திரியும், பண்டித கதிரைவேற்பிள்ளையும் அவருள் குறிப்பிடத்தகுந்தோராவர்.

ஆழ்ந்த சைவப்பற்றும், நுண்ணிய தமிழறிவும், அழுக்காறு இல்லாத பெருந்தன்மையும் தாமோதரனாரின் இயல்புகளாக இருந்தன. தனது மகன் அழகுசுந்தரம் கல்லூரிக் கல்விமுடித்துப் பெரும்புலமை எய்தியிருந்தார். பின்னால் இவர் யாழ்ப்பாணம் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தவர். தந்தையாரின் விருப்பத்துக்கு

மாறாக கிறித்தவ சமயத்தில் சேர்ந்து விட்டார். தந்தைக்கும் மகனுக்கும் தொடர்பு நீடிக்கவில்லையென்றாலும் தாமோதரனார் மகனை வெறுத்து ஒதுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவரது தமிழ்ப்பற்றுக்கு ஈடிணையில்லை. கீழ்வரும் பகுதி அதனை விளக்கும்.

> ''தமிழ் சுயபாஷை யென்பதூஉம், அதன் பெயர் திரவிட மருஉவன்று தமிழ் மொழியே யென்பதூஉம், அஃது பரத கண்டத்தில் எப்பாஷைக்கும் பிந்தியதன்று என்பதூஉம், எவ்வாற்றானும் பிறபாஷைகளுக்குத் தாழ்ந்த தொன்றன் றென்பதூஉம், வீரசோழியப் பதிப்புரையில் ஆக்ஷேப நிராகரண சகிதமாக விவரித் தெழுதியிருக்கின்றேன்''.

தமிழும் ஆங்கிலமும் பழுதறக்கற்ற பூண்டி அரங்கநாத முதலியார் கச்சிக் கலம்பகம் எனும் நூலை 1892-ஆம் ஆண்டு வெளியிட்டார். இச் சிற்றிலக்கியம் காலத்துக் கேற்ற நூல இல்லையென்றும், இதில் பயின்று வரும் உவமையுர் உருவகங்களும் பொருத்தமுடையன அல்ல என்றும் எதிர்ப்புக் கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. திவான்பகதூர் கிருஷ்ணமாச்சாரியார் இவ்வேலையை செய்த தாகச் சொல்லப்படுகிறது. இதுகண்டு கவலையுற்ற அரங்கநாதர் தமிழறிஞர் தாமோதரனாரை அணுகினார். 'கச்சிக்கலம்பகத்தின்பெருமையும் தேவையும்' என்ற தலைப்பில் தாமோதரனாரால் ஒரு ஆங்கிலக் கட்டுரை பத்திரிகைகளில் வெளிவந்ததும், எதிர்ப்புகள் அடங்கி விட்டன.

புதிதாக ஒரு நூலைப் பதிப்பித்தல் என்பது எளிதான காரியம் அன்று. அதுவும் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பணியில் ஈடுபட்டோருக்கு எதிர்ப்பட்ட இன்னல்கள் சொல்லுந் தரமன்று. போதிய பணவசதியின்மை, ஓலைச்சுவடிகள் கிடைக்காமை, கிடைத்தாலும், சிதைந்தும் உருமாறியும் இருந்தமை, சுவடிகளை ஒப்புநோக்கிப் படிக்கும்போது ஏற்படும் இடர்ப்பாடுகள் ஆகிய இன்னபிற தடைகளையும் பொருட்படுத்தாது இவர்கள் செய்த தன்னலமற்ற பணியினால் பழந்தமிழ் இலக்கியங்கள் நம் கையில் தவழ்கின்றன. ஓலைச்சுவடிகளுக்காக ஊர்கள் தோறும் அலையும்போது சில இடங்களில் செல்லரித்துப் போனவையும் கிடைக்கும். அதனைப்பற்றி தாமோதரனாரின் வருத்தம் தோய்ந்த கூற்று வருமாறு.

(i) ''என்சிறு பிராயத்தில் எனது தந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்கள் இப்பொழுது தமிழ் நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித்தப்பியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலையைத் தொட்டுப் பார்த்தாலன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது, கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒன்றைப் புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது இனி எழுத்துக்களோவென்றால் வாலுந்தலையுமின்றி பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது''

(ii) சுவடிகள் ''இங்கும் அங்கும் ஒளித்துக் கிடந்து படிப்பாரும் எழுதுவாரும் பரிபாலிப்பாருமின்றிச் 'செல்துளைத்த புள்ளியன்றி மெய்புள்ளி விரவாத சென்னாளேட்டிற் - பல்துளைத்து வண்டு மணலுழுத வரியெழுத்து உடையவாய்ச் செல்லினால் அரிக்கப்பட்டும் ப்ராணங்களால் துளைக்கப்பெற்றும் மூன்றாவது பூதமான மண்ணின் வாய்ப்படுகின்றன.''

பல்வேறு பாடங்களைக் கடைசியில் ஒப்பு நோக்கிப் பதிப்பிக்கும் போது ஏற்படும் இன்னலை அனுபவித்துச் சொல்லும் பகுதி :

''பரிசோதனாசிரியர் படுங்கஷ்டமும் ஒரு அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவத்தாலன்றி அறியப்படாப் பொருள்கள். ஒன்றுக்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளை அடுக்கி வைத்துக்கொண்டு என் கண்காணச் சிந்தாமணி பரிசோதனை செய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமந் வே. சாமிநாதையரைக் கேட்டால் தெரியும்.''

தம்மிலும் இருபத்திரண்டு ஆண்டுகள் வயதில் இளையவரான உ. வே. சா. அவர்களை உரிய இடத்தில் தக்காங்கு பாராட்டும் தாமோதரனாரின் பெருந்தன்மை பெரிதும் பாராட்டத்தக்கது. நூல்களைப் பதிப்பித்தலில் உ வே. சாமிநாதய்யர் மீது கூட ஒரு குற்றம் சுமத்தப்படுவது உண்டு.

ஆன்முலையறுத்த அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்

வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிழம் புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ

—(34)

என்பது ஒரு புறநானூற்றுப் பாடலின் சில வரிகள். உ. வே. சா அவர்களின் பதிப்பில் 'குரவர்த்தப்பிய' என்ற சொற்றொடர் 'பார்ப்பார்த் தப்பிய' என்று காணப்படுகிறது. உத்தமதானபுரம் அய்யர் அவர்கள் இந்தப் பிரதிபேத வேலையைச் செய்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இத்தகு இடைச்செருகல் ஏதுமின்றி, காய்தல் உவத்தல் இன்றி ஓலைப்பிரதிகளைத் தாம் கண்டவாறே தாமோதரனார் பதிப்பித்துள்ளார். வடமொழியை வெறுப்பவர் என்று அக்காலத்தே இவரைப்பற்றி பொய்ப் பிரச்சாரம் பண்ணியிருக்கிறார்கள். வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை வாய்ந்த தாமோதரனார் தமது கலித்தொகை முன்னுரையில் மிகவும் அடக்கமாக அதற்குப் பதிலளித்துள்ளார். தாமோதரனார் ஒரு புலனழுக்கற்ற அந்தணாளர் என்ற பொருள்பட பரிதிமாற் கலைஞரே ஞானபோதினி (Vol. iv - பக்கம் 203) இதழில் இவரை உளமாரப் பாராட்டியுள்ளார்.

கொள்கை ரீதியான எதிர்ப்பு வந்தவிடத்து, எதற்கும் அஞ்சாது தனது கொள்கையினை நிலைநாட்டும் நெஞ்சுரம் மிக்கவர் தாமோதரனார். கமலைச் சாமிநாததேசிகரின் இலக்கணக் கொத்துரையின் பிழைபட்ட தன்மையை எடுத்துக்காட்டித் தனது முடிவே சிறந்தது என்று நிரூபித்தமையே இதற்குச்சான்று.

தமிழ்த் தாத்தா எனும் சிறப்புப் பெயர் உ. வே. சா. அவர்கட்கு உரியது. காலத்தாலும் ஓலைச் சுவடிகளை அச்சுக்குக் கொண்டு வருவதில் முந்தியமையானும், சைவநெறிச் சால்பில் தலைசிறந்து நின்றமையானும், அச் சிறப்புப் பெயர் தாமோதரம் பிள்ளைக்கே பெரிதும் பொருந்துவதாகும் என்பர் காலஞ்சென்ற இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் கைலாசபதி. இக்கருத்து தாமோதரம் பிள்ளையிடம் கொண்ட பற்றின் அடிப்படையில் அல்லாது உ.வே.சா அவர்கள் மீது ஏற்பட்ட வெறுப்பினால் அல்ல என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

# ஆண்மக்கட் பெயர்கள்–ஓர் ஆய்வு

—சென்ற இதழ்த் தொடர்ச்சி
அ. நடராசன், எம். ஏ, எம். பில்.,
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

## 7. ஆண்மக்கட் பெயர்கள் பற்றிய சில பொது முடிவுகள்

1. தனியொரு மனிதனைப் பிறரிடமிருந்து பிரித்து அவனைத் தனித்து ஒரு வகையான அடையாளம் காட்டுவதற்கே பெயர்கள் தோன்றியுள்ளன.

2. பெயர்கள் தொடக்க காலங்களில் தெய்வப் பெயர்களாக ருந்தன. பின்னர் இவை குலப் பெயர்களாகவும் வந்துவிட்டன.

3. வீரம் ஒழுக்கம், நன்னெறி சான்ற மன்னர்கள், படைத் தளபதிகள் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டு உள்ளன.

4. இலக்கியங்களில் வரும் சிறப்புப் பாத்திரங்களின் பெயர்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

5. தனித் தமிழ் இயக்கம் தோன்றியதற்குப் பின் தூய தமிழில் பெயர்களை இட்டனர்.

6 தங்களுடைய முன்னோர் இறந்த பின்னர் அவர்களுக்குச் சமாதி கட்டி வணங்கும் பழக்கமும், அவர்களின் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டும் பழக்கமும் மக்களிடம் இன்னும் காணப்படுதலை அறியலாம்.

7. முதல் குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தைக்குத் தங்கள் குலதெய்வத்தின் பெயரைச் சூட்டுவதை மக்கள் இன்னும் மரபாகக் கொண்டுள்ளனர்.

8. தொடர்ந்து இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்து விட்டால், மூன்றாவதாகப் பிறக்கும் குழந்தைக்கு மூக்கு குத்தி மூக்கன் என்ற பெயரைச் சூட்டும் பழக்கம் காணப்படுகிறது.

9. தொடர்ந்து குழந்தைகள் பிறந்து இறந்து விட்டால் அடுத்துப் பெற்ற குழந்தையின் தாய் தான் வசிக்கும் தெருவில் உள்ள வீடுகளில் உணவுப் பிச்சை எடுத்து வந்து அக்குழந்தைக்கு ஊட்டி 'பிச்சை' எனப் பெயர் சூட்டும் மரபு உள்ளது.

10. மேலும் அதிகக் குழந்தைகள் பெற்ற தாயிடம் தன் குழந்தையைக் கொடுத்து விட்டுப் பின் 'தவிடு' கொடுத்து விலைக்கு வாங்குவதுபோல் திரும்ப அக்குழந்தையை வாங்கி 'தவிடு' எனப் பெயரிடும் பழக்கம் இன்னும் காணப்படுறது. இவைகளின் மூலம் குழந்தைகளின் ஆயுள் நீடித்திருக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுதலை அறிய முடிகிறது.

11. உடலின் தோற்றம், செயல், பண்பு, தொழில், விளை-யாட்டுஇடம், கேலி, அன்பு, மரியாதை போன்ற காரணங்களினால் பட்டப் பெயர்களும் தோன்றுகின்றன.

12. புதுமை விரும்பிகள் இற்றை நாட்களில் பழைய பெயர் களை விடுத்தும், தெய்வப் பெயர்களை விடுத்தும், புதுப்பெயர்-களைச் சூட்டுகின்றனர். எனவே பழைய பெயர்களும், தெய்வப் பெயர்களும் மறைந்து வருகின்றன.

13. இதிகாசம், இலக்கியம், சமயம், வீரம், மரபு, ஒழுக்கம் அரசியல், திரைப்படம் போன்றவற்றின் தாக்கத்தினால் பெயர்கள் புதியனவாக வருகின்றன.

14. அரசியல், திரைப்படம் போன்ற துறைகளே மக்களின் கவனத்தை அதிகமாக ஈர்ப்பதனால், வருங்காலத்தில் அந்த இரு துறைகளைச் சார்ந்த பெயர்களே அமைந்தாலும் வியப்பில்லை.

(முற்றும்)

# ஊர்வசி

— ப. முத்துசாமி, எம். ஏ, எம். எட்.
தாராபுரம்.

அன்னையல்லை மகளுமல்லை மணமகளு மல்லை
அழகுமகள் ஊர்வசிநீ யாருடைய பெண்ணே?
கன்னியடி நீயந்த விண்ணுலகின் உயிரைக்
கவர்ந்துமயக் கிடவந்த காரிகைநீ கண்ணே!
களைத்தடிசோர்ந் திடுமாலை கால்நடைகள் திரும்பிக்
கருத்துடனே தொழுவடையும் இருள் கவிந்தநேரம்!
விளக்கொளியை ஒருநாளும் கொளுத்திவைத்த திலைநீ
விழைந்துவரும் இதயமுடன் இதழ்நகையும் கொண்டே
கவிந்திருள்தான் மிகமறைவென் றுளமகிழ்ந்து நீயுன்
கடிமணத்து முதலிரவுப் படுக்கை சென்ற தில்லை!
பொழுதுபுலர் வைகறைபோல் முகத்திரைநீ இல்லாய்
புன்னகைசேர் நாணமில்லாய் ஊர்வசிநீ பெண்ணே!
எழுதரிதாய் நிரம்பிவழிந் துளங்கிளர்க்கும் ஒளிதான்
ஏந்திழை நிற்படைத்ததை எண்ணவல்லார் யாரே!
முதல்வசந்த முதல்நாளில் கடல்கடைந்த போதில்
முகிழ்த்தெழுந்து சிரித்துவந்த மோகனமாம் பெண்ணே!
துதையுமோர் வலதுகையில் அமிழ்தமுடைக் கிண்ணம்
தொடர்ந்திடது கையில்நச்சுக் கிண்ணமுடன் வருவாய்!
கடலரக்கன் மயக்குண்ட பாம்பினைப்போல் நினது
காலடியில் தனதுபடம் ஆயிரமும் வீழ்த்தான்!
நீளலையில் நினதுசுடர்ப் பழியில்பெரும் சோதி
திகழ்மல்லி வெண்மலர்போல் தேசுடனே கிளரும்
என்றும்நிலை இளமைதவழ் எங்கள் ஊர்வசியே!
என்றென்றும் மெல்லரும்பாய் இருந்ததுண்டோ நீதான்?
கவினிருட்டு நீளிரவின் கவின்தொட்டில் மடியில்
கனகவொளிச் சுடர்மணிகள் பவழமணித் திட்டில்
துன்றுகன உருவமைப்பில் நின்றுலவும் உயிர்கள்
தொடர்ந்திலங்கும் வெள்ளியிடைத் துயின்றதுண்டோ
நீதான்?

(தொடரும்)

**செய்திகள் :**

## தமிழ்ப் பேராசிரியருக்கு ஆங்கில நாட்டில் வரவேற்பு.

உலகமெங்கணும் ஆங்கில மொழி, இலக்கியம், அறிவியல் ஆதியவற்றைப் பரப்பும் நற்பணியில் ஈடுபட்டுள்ளது பிரிட்டிஷ் கவுன்சில் எனும் நிறுவனம். இங்கிலாந்து அரசே நடத்தும் இந்நிறுவனம் 1800/-ரூ மாநாட்டுத் தொகையினை ஒரு ஈரோட்டுத் தமிழ்ப் பேராசிரியரின் பெயரில் செலுத்தி. அவரையும் ஆங்கில நாட்டுக்கு அழைத்தது. உலக அகராதி மாநாடு நடக்கும் இடம் எக்சீடர் பல்கலைக்கழகம் (Exeter University). அம்மாநாட்டில் கலந்துகொண்டு சீரும் சிறப்புடனும் திரும்பியுள்ள வாசவி கல்லூரிப் பேராசிரியர் சதாசிவம் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கி உள்ளார்.

1983-செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில் மாநாட்டில் கலந்து கொண்டு அந்நிகழ்ச்சிக்கென்றே அச்சிட்ட மூன்று ஆங்கில அகராதி நூல்களையும் பேராசிரியர் அங்கேயே வெளியிட்டுள்ளார் (அடுக்குமொழி அகராதி, ஆங்கிலத்தின் அழகும் தனிச்சிறப்பும், ஆங்கிலத்தின் சொல்லியங்கள்). தொகுப்பு நூல் எழுதுவாரைக் குறைத்து மதிப்பிடுதல் இலக்கிய உலகின் பழக்கம். ஆயினும் நூலைத் தொகுப்தற்கும், அசாதாரணமான பொறுமையும், கவனமும், ஆர்வமும் வேண்டும். ஆங்கில இலக்கியத்தில் சிறந்த திறனாய்வாளராக மதிக்கப்படும் சாமுவேல் ஜான்சன் அரிதின் முயன்று தொகுத்த முதல் நூல் ஆங்கில அகராதியே. தமிழில் அகராதிகளைத் தொகுக்கும் பணியில் கடந்த இருபது ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் பேராசிரியர் சதாசிவம் ஸ்காட், எலியட், டிக்கன்ஸ் ஆகியோரின் சிற்சில ஆங்கில நாவல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். ஏராளமான அகராதி நூல்களும், திறனாய்வுக் கட்டுரைகளும் எழுந்து நடமாட முடியாமல் அவர்தம் இல்லத்திலேயே முடங்கிக்கிடக்கின்றன. தமிழ்மொழியின் நலம் நாடும் நிறுவனங்களும், அரசும் கைதூக்கி விட்டால், அந்த அரிய தமிழ்நூல்கள் வீறு நடைபோட்டு வெளிவர இயலும். ஆங்கிலநாடு சென்று திரும்பிய அருந்தமிழ்ப் பேராசிரியரின் பணி மேலும் சிறந்திட வாழ்த்துகிறோம்.

**எழுத்தாளர்களின் இலக்கியப்பாசறை**

இளம் எழுத்தாளர்களை, கவிஞர்களைப் பாராட்டி ஊக்கம் கொடுப்பதே நோக்கமாகக் கொண்ட நற்கூடல் இலக்கியக் கழகம்

தனது தொடக்க விழாவினை தமிழ்ச்சங்க அரங்கில் கொண்டாடியுள்ளது. சந்தம் எனும் பெயரில் ஆங்கில-தமிழ் மாத இதழினைத் தொடங்குவதாக உள்ள இம்மன்றத்தில் உறுப்பினராக சேர்வதற்கு வேண்டும் தகுதிகள் இரண்டு - எழுத்து வன்மை, இலக்கிய ஆர்வம். செந்தமிழ்க் கல்லூரியின் தாளாளர் திரு.மா. தனுக்கோடி பாண்டியன் ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளன்று விழாத்தலைவராக இருந்து வாழ்த்தினார்கள். இலக்கியக் கழகத்தின் தலைவர் பாபாராசு, செயலர் அசோக்ராசு ஆகியோர் தமிழன்பர்களின் ஒத்துழைப்பையும், இலக்கியப் படைப்புகளையும் வரவேற்கிறார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
நற்கூடல் இலக்கியக் கழகம்
16, விசுவாசபுரி 4-ஆம் தெரு
ஞான ஒளிவுபுரம் மதுரை—16

---

**அமுத மொழி**

எந்த நிலையிலும் பொய் ஏற்றதல்ல. நல்ல காரியத்திற்காகப் பொய்யாக நடிப்பது கூட நல்லதல்ல. மனப்பக்குவம் அடையாமல் காவியுடை மட்டும் அணிந்திருந்தால் நாளடைவில் எல்லா விதத்திலும் கெடுதல் ஏற்படுகிறது. அடிக்கடிப் பொய் பேசுவதாலும், பொய்யான செயல்களை மீண்டும் மீண்டும் செய்வதனாலும், பாவச் செயல்களைச் செய்வதில் உள்ள பயம் படிப்படியாக நீங்கி விடுகிறது. இதைவிட இல்லறத்தானுக்குரிய வெள்ளையுடை அணிவது மேல், மனத்தில் பற்று சேர்ந்திருக்கிறது. சிலமுறை குறிக்கோள்களிலிருந்து வழுக்கி விழுந்து விடுகிறான். இந்நிலையில் காவியுடை அணிவது மிக மிகப் பயங்கரமானது; கொடுமையானது.

—பகவான் இராமகிருஷ்ணர்

# தொழிலாளிக்கு நோபல் பரிசு

வலேசா என்னும் போலந்து நாட்டுத் தொழிற்சங்கத் தலைவருக்கு சுமார் 19 லட்சம் ரூபாய் நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இப்பரிசை ஒரு தொழிலாளி பெறுவது இதுவே முதல் தடவை. இங்கு ஒரு வேடிக்கையான உண்மையைக் கவனிக்க வேண்டும். கிழக்கு ஐரோப்பாவில் போலந்து ஒரு கம்யூனிச நாடு. உலக முழுதும் உள்ள தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசுவது பொது உடைமைக்கட்சி. ஆனால் கம்யூனிச ஆளுகைக்குட்பட்ட போலந்து நாட்டின் தொழிற் சங்கத்தலைவர் வலேசாவுக்கும் அவர் தலைமை யேற்றுள்ள சாலிடாரிட்டி இயக்கத்துக்கும் தடை. தொழிலாளருக்குப் பாடுபடுவோம் என்ற சோவியத் கூற்று உண்மையானால் வலேசாவிற்கு நல்லது செய்யாவிடினும் அல்லது செய்யாமல் இருக்க வேண்டுமே! பின் ஏன் அவரைக் கைது செய்து, தடை விதித்து சிறையில் அடைக்கிறார்கள்? உண்மை இது தான்: வலேசா கடவுள் நம்பிக்கையுள்ள ரோமன் கத்தோலிக்கர். அன்றாடம் மாதாகோவிலுக்குச் சென்று வழிபாடு செய்பவர். சோவியத் ரஷ்யாவின் கம்யூனிசக் கட்சி தமது நாட்டுத் தொழிலாளர் இயக்கங்களில் தலையிட்டு மேலாண்மை செய்வதை எதிர்ப்பவர். அரசியல் தலையீடு இல்லாமல் தொழிற்சங்கம் நடத்த விரும்புகிறவர். வன்முறையிலும், மறைமுகமான நாசவேலையிலும் நம்பிக்கையின்றி வெளிப்படையாக எதனையும் பேசித் தீர்வு காண விரும்புகிறவர். ஜனநாயகத்தை மதிப்பவர். அதன் மீது நம்பிக்கையுள்ளவர்.

35 மில்லியன் மக்கட் தொகையுள்ளது போலந்து நாடு, மாபெரும் தொழிற்சங்கத்தலைவரான வலேசாவுக்கு அங்கே நல்ல மதிப்பு. 40 - வயது நிரம்பிய இவர் தமது மனைவி மற்றும் ஏழு குழந்தைகளுடன் டான்சிக்கில் வசிக்கிறார். துறைமுகத்தில் மின்சார ஊழியர். மாதக் கணக்கில் சிறையில் அடைபட்டுக்கிடந்தபோது தொழிலாளர் யூனியன்களே குடும்பத்தின் செலவுகளைப் பார்த்துக் கொண்டன. 'மனித உரிமைகளை மதிக்காத எந்த அரசியல் கோட்பாடும் எனக்குப் பிடிக்காது என்கிறார் வலேசா. பத்தொன்பது லட்ச ரூபாயையும் கிறித்தவக் கோயிலுக்கு வழங்கி விடத் திட்டமிட்டுள்ளார்.

# அறிவியல் வினா – விடை

— திரையன்
பி. எஸ்ஸி

(1) தண்ணீர் குடிக்காமலேயே நாட்கணக்கில் ஒட்டகம் எப்படி உயிர் வாழ்கிறது?

ஒட்டகத்திற்குப் பாலைவனக் கப்பல் என்பதும் ஒரு பெயர். தண்ணீர் குடிக்காமலேயே வாரக் கணக்கில் அது வாழ முடியா-விட்டாலும், பல நாட்கள் அது தொடர்ந்து பயணம் செய்து கொண்-டேயிருக்கும். உடம்பு முழுதும் உள்ள தசைநார்களில் (tissue) தண்ணீர் கோர்த்துக் கொண்டிருக்கிறது. ஒரு முறை அருந்திய நீர் உடம்பிலிருந்து வியர்வையாகவும், சிறுநீராகவும் மிகுதியாகக் கழிந்து விடாமல், உடம்பிலேயே தங்கி இருப்பதற்கேற்றவாறு, ஒட்டகம் நிறைய உப்பினைத் தின்னும் பழக்கம் உடையது. வயிற்றின் ஒரு பாகத்தில் தேக்கி வைத்திருக்கும் நீரையே அது பயன்படுத்திக் கொள்கிறது என்பது ஓரளவு தான் உண்மை. மிக நீண்ட பாலை-வனத்தைக் கடக்க பலநாட்கள் ஆகும். இதற்கு வயிற்றில் உள்ள நீர் மட்டும் போதாது. ஒட்டகத்தின் திமில் (lymp) முழுதும் கொழுப்-பினால் ஆனது. தனக்கு வேண்டிய உணவுப் பொருளை இத்திமிலில் இருந்தும் ஒட்டகம் எடுத்துக் கொள்ளுகிறது. இது தீர்ந்து விட்டதும், உடம்பின் தசைநார்களில் உள்ள நீர் தானாகவே உற்பத்தியாகி உடம்பின் பல பகுதிகளுக்கும் பரவி, வெப்பத்தை சமனப்படுத்திக் கொள்கிறது. ஊட்டமாக வளர்ந்துள்ள ஒட்டகங்கள் ஏறத்தாழ அறுபது லிட்டர் நீரை உற்பத்தி செய்யும் தகுதி வாய்ந்தவை-யாகும்.

(2) திமிங்கிலங்கள் மீன் வகையினைச் சேர்ந்தனவா?

கடல்நீரில் வாழ்ந்தாலும், திமிங்கிலங்கள் மீன் வகையைச் சார்ந்தன அல்ல. மீன்களைப் போன்று அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது இல்லை. குட்டிபோட்டுப்பால் கொடுப்பதனால், திமிங்கிலங்களை நீரில் வாழும் மிருகங்கள் என்று கூறலாம். வாழும் உயிர்களுக்குக் காற்று வேண்டும் அல்லவா? நீருக்குள் கரைந்திருக்கும் காற்றை பக்கவாட்டில் வாய் போன்ற இரண்டு (Gills) உறுப்புகளினால் மீன்கள் பெற்றுக் கொள்கின்றன. ஆனால்

திமிங்கிலங்களோ நீர்மட்டத்திற்கு வந்து காற்றைச் சுவாசிக்கும். பின் நீருக்குள் அமிழ்ந்தால், இரண்டு மணி நேரத்திற்கு காற்றுக்-காக அவை வெளியில் தலைகாட்ட வேண்டியதில்லை. மீன்கள் தமது வால் பகுதியை பக்கவாட்டில் இடது புறமும் வலது புறமுமாக வேகமாக அடித்து நீந்தும் இயல்புடையவை. திமிங்கிலங்களோ தமது நீண்ட வாலினை மேலும் கீழும் அசைத்துக் கொண்டே நீந்துகின்றன. செதில்களோ மயிர்க்கால்களோ இல்லாமல் உடலின் மேற்பரப்பு வழுவழுப்பாக இருப்பதனால் நீரைக் கிழித்துக் கொண்டு திமிங்கிலங்கள் எந்தப் பக்கத்திலும் மிக விரைவாக நீந்த முடிகிறது. திமிங்கிலங்களில் இரண்டு மூன்று வகைகள் உள்ளன. ஆயினும் நீல நிறத் திமிங்கிலமே நீளவாட்டில் முப்பது மீட்டர்வரை வளருகின்றன. அவற்றின் எடையும் 130 டன் வரை உள்ளது. இப்படிப் பிரம்-மாண்டமான உருவமாக இருப்பதனால் தான், திமிங்கிலங்கள் சிற்சில சமயங்களில் கப்பல்களையே தாக்கிக்கவிழ்த்து விடுகின்றன. ஹெர்மன் மெல்வில் என்னும் அமெரிக்கர் எழுதிய மொபி டிக் என்னும் நாவல் மூன்று நாட்கள் நடந்த பயங்கரமான திமிங்கில வேட்டையினைப் பற்றியதாகும்.

(3) பறவைகள் ஆயிரக்கணக்கான மைல்கள் பறக்கின்றனவா?

நடுக்கும் குளிர்காலங்களிலோ கடுமையான வெப்ப நாட்-களிலோ பறவைகள் இடம் மாறுவது உண்டு. ரஷ்யாவில் கடுங்-குளிராக இருக்கும்போது சில பறவைகள் செங்கல்பட்டு அருகில் வேடந்தாங்கல் ஏரிக்கு வருகின்றன என்று கண்டு பிடித்துள்ளார்கள். கூரிய பார்வையும், அசாதரணமான பறக்கும் சக்தியுமே இப்படி ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து செல்ல உதவுகின்றன. ஆங்காங்கே சிற்சில அடையாளங்களை மையமாக வைத்து அவை பறக்கக் கூடும். கடற்கரை ஓரமாகவே பறந்து பிறநாடுகளுக்குச் செல்லும் பறவைகளும் உண்டு. பிஜியன், ஹல் போன்ற பறவைகள் இரவில் விண்மீன்களையும், பகலில் சூரியனையும் பார்த்துத் தாங்கள் செல்லும் திக்கினை உறுதிப்படுத்திக் கொள்கின்றன. அமெரிக்காவில் காணப்படும் பொன்னிறமான பிளாவர் என்ற பறவை கனடாவி-லிருந்து தென் அமெரிக்க நாடுகளுக்குப் பறந்து செல்லும் போது இடையில் மூவாயிரம் கிலோமீட்டர் தூரம் உள்ள அட்லாண்டிக் கடலை யும் கடக்கிறது. காலநிலை மாறுபடும்போதும், உணவுத் தட்டுப்பாடு

ஏற்படும்போதும், பறவைகள் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்கின்றன என்பது உண்மையேயாயினும், இத்தகைய மிக நீண்ட தூரத்தை எப்படிக் கடக்கின்றன என்பது பற்றித் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்ல இயலவில்லை. பம்பாயில் வாழும் முது-பெருங்கிழவர் சலீம் அலி இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் வாழும் பல்வேறு விதமான பறவைகளின் வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம், முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் தன்மை ஆகியன பற்றி விரிவாக நூல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(4) பனிக் கட்டி எப்படி நீரில் மிதக்கிறது?

தண்ணீர் உறையும்போது கெட்டியாகி விடும். அதுவே பனிக் கட்டி எனப்படுகிறது. தண்ணீர் உறையும்போது விரிவடைகிறது. 10 கிலோ தண்ணீரை குளிரவைத்து பனிக்கட்டியாக்கும்போது 11 கிலோ கிடைக்கும். இக்கட்டியினைத் தண்ணீரில் தூக்கிப்போட்டால், இது மிதக்கும். பனிக்கட்டி நீரின் அளவில் பத்தில் ஒன்பது பங்கு கனமுடையது. எனவே ஒன்பது பங்கு அளவு பனிக்கட்டி நீருள் அமிழ்ந்திருக்கும். மீதமுள்ள ஒரு பங்கு தான் நீருக்கு மேல் தெரியும் மரத்துண்டு நீரின் எடையில் பாதி அளவுதான். இதனை நீருக்குள் போடும்போது பாதி அளவு அமிழ்ந்து விடும், கிரீன்லாந்து போன்ற மிகவும் குளிர்ந்த பகுதிகளில் தண்ணீருக்கு மேலே சிறிதளவே தெரியும் பனிக்கட்டியை லேசாக எண்ணி அதன் அருகே செல்லும் கப்பல்கள் மூழ்கி இருக்கும் பனிப் பாறைகளில் மோதி நாசம் அடைவதும் உண்டு,

# பைந்தமிழ் வளர்த்த தேவர்

— கலைமாமணி ஆறுமுகனார்

திண்டுக்கல் வட்டம் இராமலிங்கம்பட்டி எனும் சிற்றூரில் பிறந்த கவிஞர் ஆறுமுகனார் அவர்கள் விளம்பரத்திலும், ஆரவாரத்திலும் விருப்பம் காட்டாத நாடகத் தமிழ்க்கவிஞர். அவரது தமிழுள்ளம் தெள்ளிய நீரோடை போன்றது. 1941-இல் காந்தியடிகளின் ஆணைப்படி தனிநபர் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். 1970-இல் ஔவை. சண்முகம் தலைமையில் நடந்த பாராட்டு விழாவில் நாடக அன்பர்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்தினர். 1978-இல் தமிழக முதல்வர். எம்.ஜி.ஆர். கவிஞர் ஆறுமுகனாருக்குப் பொற்கிழி வழங்கினார். 'தமிழகத்தின் கலைமணிகள்' என்னும் கவிஞரது நூலில் காணப்படும் முதல் கவிதை ஈண்டு வெளி-யிடப்படுகிறது.

—ஆசிரியர்

1. உலகெலாம் போற்றி நின்ற
ஒளி மிகும் தமிழணங்கின்
கலை எழில் இடைக் காலத்திற்
கலைந்திட அதனை முன் போல்
நிலை பெறச் செய்வதற்கே
நெடிதும் நற் பணி மேற் கொண்ட
தலை மகன் இவனே 'என்று
தமிழகம் சாற்றும் அம்மா!

2. சுமை சுமையாகும் ஓலைச்
சுவடியின் வடிவில் நின்ற
கமழ் தமிழ்க் காவியங்கள்
கருத்துடன் அச்சிலிட்டே
தமிழர்கட் களித்த சான்றோன்!
தவ நெறிக் கலைமாச் செல்வன்!
சமய மெய்ச் சைவம் கொண்டோன்!
தமிழ்க் கடல் ஆழம் கண்டோன்!

3. பார் புகழ்ந் தேத்தும் நல்ல
பதிசேது மரபில் வந்து
சீர் பெறும் வாழ்வு வாழ்ந்தோன்!
திருமிகும் செம்பி நாடன்!
கார் நிகர் கொடையான்! கற்ற
கலைஞரைப் போற்றிக் காக்கும்
ஆர்வமும் அன்பும் கொண்டோன்!
அருந் தமிழ்ப் பாவல் லோனே!

4. தன்னிக ரில்லான்! பொன்னுச்
சாமி மால் தவத்தால் வந்த
மன்னவன்! ஈதலே தன்
மாண்புறு பணியாய்க் கொண்டோன்!
தென்னவன் செங்கோல் கண்ட
செந்தமிழ் மதுரை மூதூர்
தன்னிலே மீண்டும் நான்காம்
தமிழ்ச் சங்கம் தழைக்கச் செய்தோன்!

5. பாலவ நத்தம் என்னும்
பழம் பெரும் பதியல் நற் செங்
கோலொடு வாழ்ந்து நின்ற
குறு நில மன்னன்! சான்றோன்!
கோலமார் தமிழ் நீருண்ட
குளிர் முகிலனையான் காக்கும்
மாலவன்! புகழைப் போற்றி
வாழ்த்துவர் நாட்டு மக்கள்!

6. தாயினை யொத்த சங்கத்
தமிழுக்கே உலகில் வாழ்ந்தோன்!
ஆய நற் கலைகள் கற்றோன்!
அமர வாழ் வினிற் றுலங்கி
மாயிருள் ஞாலத்திற் கோர்
மலை விளக் கென்றே நின்ற
தூய நற் குணத்தான்! பாண்டித்
துரைபுகழ் வாழி வாழி!

# இலங்கைத் தமிழர்

செடியும் கொடியும் மண்டிக் கிடந்த ஈழத்து மலைப்பகுதியை வெட்டியும் திருத்தியும் தேயிலையும் ரப்பரும் செழிக்கச் செய்த மக்கள் கொலைக்கும், கொள்ளைக்கும் ஆளாகி குருதி சிந்திப் பரிதவித்து நின்ற கொடுமை 1983-ஆகஸ்டுத் திங்கள் கடைசி இரண்டு வாரங்களில் நிகழ்ந்தது. உணர்ச்சி வயப்பட்ட ஏதோ ஒரு சிங்களக் கும்பல் வெறித்தனமான மிருகத்தாக்குலில் ஈடுபட்டது என்றால் அதனைப் புரிந்து கொள்ளலாம். ஏறத்தாழ இருபது நாட்களுக்கு மேல் கண்மூடித்தனமான கொலையிலும், கொள்ளையிலும், கற்பழிப்பிலும், சொத்துகளைச் சூறையாடுவதிலும் தலைமை வகித்தது வேறு யாருமல்ல; மக்களைக் காப்பற்ற வேண்டிய போலீசும், ராணுவமும்தான். இவர்கள் முன்னின்று நடத்திய இத் திட்டமிட்ட சதி, உலக வரலாறு கண்டிராத மாபெரும் கொடுஞ் செயல். ஆயுதமில்லாத ஆடவரையும் பெண்டிரையும், குழந்தைகளையும் கொன்று போட்டுத் தீயில் எரித்த இனவெறியை நாம் வேறெங்கும் கண்டதில்லை. உகாண்டாவில் கோமாளித்தனமாக ஆட்சி நடத்திய இடி அமீன் கூட இந்தியர்களை வெளியேற்றினானே தவிர, வெட்டியும் கொத்தியும் வேதனைப்படுத்த வில்லை. எரித்தும் அழித்தும் இரத்த வெறி கொண்டு அலையவில்லை. இந்தியப் பிரதமர் உரிய காலத்தில் தட்டிக் கேட்டிருந்தால், ஈழத்தீவினில் பல கோடி ரூபாய்களும் ஆயிரக்கணக்கணக்கான உயிர்ச்சேதமும் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பது உண்மையே. தமிழர்களின் அவலக்குரல் டெல்லியைச் சென்றடைவதற்கு தமிழகத்து மக்கள் கட்சி வேறுபாடின்றிக் கண்டன ஊர்வலம் நடத்தினார்கள். இந்த நிலையில் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளிகளின் பரிதாப நிலையைச் ''செந்தமிழ்'' பத்திரிகையும் சிந்திக்கத்தான் வேண்டும். இலக்கியப் பத்திரிகை அரசியலில் விழலாமா என்று கேட்கும் அதி தீவிர இலக்கிய மேதைகள் நம்மில் இருக்கலாம். அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். நடப்பு நிலையிலிருந்து எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் நம்மை நாம் துண்டித்துக் கொள்வது பொருத்தமல்ல. செந்தமிழ் ஏடு எதிர்காலத்தில் புரட்டப்படும்போது வரலாற்று உண்மைகளையும் தெரிவிக்கும் கருத்துப் பெட்டகமாய்த் திகழ வேண்டும். அது மட்டுமல்ல ஈழத்துப் பெரும்புலவர்கள் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர்கள். அவர்களின் சந்ததியினர் கண்ணீர் சிந்தும்போது செந்தமிழ் ஒரு கணமாவது அதனைச் சிந்திக்க வேண்டும். இக்கட்டுரை எந்தச் கட்சியினைச் சார்ந்தும்

எழுதப்பட்டதல்ல. இலங்கை வாழ் தமிழர் பற்றிய முழுச் செய்தி புதிய கோணத்தில் தரப்படுகிறது. கருத்துத் தெளிவு, இலங்கைத் தமிழர் பால் நமக்குள்ள கனிவு ஆகியவற்றை முன்வைத்து இக்கட்டுரை வெளியாகிறதேயன்றி எந்தக்கட்சியினையும் சார்ந்து இது எழுதப்படவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

**இலங்கையின் பண்டைய வரலாறு**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே சிவ வழிபாட்டுத் தலங்கள் ஈழநாட்டின் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டிருந்தமையை சிங்கள வரலாற்று வல்லுநர் காலி பீரிஸ் கூறுகிறார். அனுராத புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஏலேல சிங்கன் என்னும் தமிழ் மன்னன் ஆட்சி செய்தான் என்று இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது. தமிழகத்தில் கண்ணகிக்கு படிமம் எடுத்து வழிபாடு நடந்த போது, கடல் சூழ் இலங்கைக் கயவாகுவும் வந்திருந்தான் என்று சிலப்பதிகார வஞ்சிக்காண்டம் குறிப்பிடுகிறது. 16-ஆம் நூற்றாண்டில் இலங்கையைப் போர்த்துகீசியர் கைப்பற்றிய போது யாழ்ப்பாணப் பகுதியை சங்கிலி என்னும்தமிழ் மன்னன் ஆண்டதாக அவர்கள் குறிப்பெழுதி வைத்துள்ளார்கள். எனவே இலங்கையின் தொன்மையான மக்கள் என்ற உரிமை சிங்களருக்கு மட்டுமல்லாது ஈழத்துத் தமிழருக்கும் உண்டு.

இலங்கை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் ஒரு முழு நாடாக உருவாகியது. ஆங்கிலேயர் இட்ட அடிமைத்தளையை உடைத்தெறிவதில் தமிழரும், சிங்களரும் ஒருங்கு நின்று உழைத்தார்கள். 1948-இல் இலங்கையின் விடுதலைக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதற்கு முன்னால், அந்நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தமிழர்களுள் பொன்னம்பலம் ராமனாதன், அவரது இளவல் அருணாசலம் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். 28.ஆம் வயதிலேயே சட்டமேலவை உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்ட பொன்னம்பலம் ராமனாதன் வெள்ளையரிடம் போராடி சிங்களம் பேசுகின்ற புத்த மதத்தினருக்கு பல சலுகைகள் பெற்றுத் தந்தவர். மத, நிற, மொழி வேறுபாடின்றிப் பாடுபட்ட ராமனாதன் அவர்கட்கு கர்னல் ஆல்காட் என்னும் வெள்ளையத் தளபதி புத்தரைப் பற்றி எட்வின் ஆர்னால்டு எழுதிய ஆசிய ஜோதி (The Light of Asia) எனும் ஆங்கில நூலின் மூலப்பிரதியை அன்பளிப்பாகக் கொடுத்துப் பாராட்டினான்.

**விடுதலைக்குப்பின்**

இலங்கை விடுதலை பெற்றதற்குப் பின் காலப்போக்கில் இனவேறுபாடு தலையெடுக்க ஆரம்பித்தது. வரலாற்றுப் புகழ் மிக்க அனுராத புரம் புதுப்பிக்கப்பட்டபோது அங்கு குடியேறியிருந்த் தமிழர்கள் அகற்றப்பட்டார்கள். கல்வி வசதி, வேலை வாய்ப்பு, மொழிப்பிரச்னை, அரசு உதவி இவை அனைத்திலும் இலங்கைத் தமிழர்கள் சிங்களரிடமிருந்து தாங்கள் ஒதுக்கப்பட்டு வருவதை உணரத் தொடங்கினர் தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றினர். 1956-ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழி என்று அறிவித்தனர். இதற்குத்தமிழரிடை பலமான எதிர்ப்பு இருந்தது இந்தக் கட்டத்தில் தான் செல்வநாயகம் தொடங்கிய தமிழரசுக் கட்சி பலமாக வளரத்தொடங்கியது. இலட்சாதிபதியாக இருந்த செல்வநாயகம் தனித் தமிழ் ஈழப் போராட்டத்தில் இறங்கி மட்டக் களப்பு சிறையில அடைக்கப்பட்டார். ஏராளமான பணத்தைச் செலவிட்டு 'சுதந்திரன்' என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார். 1970-ஆம் ஆண்டு தேர்தல் முடிந்து சிரிமாவோ பண்டாரநாயகா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கம்யூனிஸ்டுகளும், லங்கா சமாஜக் கட்சியினரும், இலங்கை சுதந்திரக் கட்சியும் கூடி அமைத்த ஆட்சியில் தமிழர்கள் சட்ட ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டனர். 'சுதந்திரன்' பத்திரிகையில் அன்றைய நாட்டு நிலவரம் பற்றிய கட்டுரை ஒன்றில் செல்வநாயகம் அவர்கள் 'தமிழினத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறியது, இன்று வரை நிலைத்த உண்மையாகப் போயிற்று. 1974-ஆம் ஆண்டு நான்காவது உலகத்தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபோது சிங்களப் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி 9-பேரைக் கொன்ற நிகழ்ச்சி மறக்க முடியாத கொடுமை ஆகும்.

இலங்கைக் குடி உரிமைச் சட்டம் வந்தபோது பதினைந்து லட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களின் எதிர்காலம் நிச்சயம் அற்றதாகப் போயிற்று. இவர்களில் ஏறத்தாழ ஏழு லட்சம் பேரை காலப்போக்கில் இந்தியா திரும்பப் பெற்றுக் கொள்வது என்று சிரிமாவோவும், அன்றைய இந்தியப் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரியும் 1964-ஆம் ஆண்டில் கையொப்பம் இட்டனர். இந்த

ஒப்பந்தத்தின்படியும் 1974-ஆம் ஆண்டு கையெழுத்தான இந்திரா-சிரிமாவோ ஒப்பந்தப்படியும் இதுவரை மூன்று லட்சம் பேரே இந்தியாவுக்கு வந்துள்ளனர். இன்றைய கலவரங்களில் சிக்கி, இருந்த பொருளையும் பறி கொடுத்து விட்டு வந்தவர்களின் எண்ணிக்கையும் சேர்த்தால், இலங்கையை விட்டு வெளியேறியவர்கள் ஏறத்தாழ நான்கு லட்சம் என்று கொள்ளலாம். மீதம் உள்ள பத்துலட்சத்துக்கு மேற்பட்டோரின் நிலைமை திரிசங்கு சொர்க்கமாக உள்ளது. பல்வேறு தலைமுறைகளுக்கு முன்னே இலங்கையில் குடியேறிய இவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் தோட்டத் தொழில் தான். பேசுகின்ற மொழி தமிழ் என்பதைத் தவிர, தமிழ் நாட்டில் இவர்களுக்கு நேரடித் தொடர்பு கொள்ள உறவினர் இல்லை. இவர்களின் சமூக, அரசியல் நிலைமை பற்றிப் பேசுவதற்கு 'இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்' என்ற கட்சியின் தலைவர் தொண்டைமான் இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

**இன்றைய இலங்கை**

பூகோளப் பரப்பில் இங்கிலாந்து நாட்டில் பாதி அளவு என்று கொள்ளத்தகும் இலங்கையின் மொத்த ஜனத் தொகை ஒரு கோடியே முப்பது லட்சம். தமிழர்கள் ஒட்டு மொத்தமாக முப்பது லட்சம். இந்திய வம்ச வழியினராகிய தோட்டத் தொழிலாளர்கள் பத்து லட்சம். மீதம் இருபது லட்சம் ஈழத்தமிழர்கள்.

இலங்கையில் உள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் மூன்று:

ஜெயவர்த்தனாவின் தலைமையில் இயங்கும்
ஐக்கிய தேசீயக் கட்சி (U.N.P)

சிரிமாவோ பண்டார நாயகாவின்
இலங்கை சுதந்திரக்கட்சி (S.L.F.P.)

அமிர்தலிங்கம் தலைமையில் உள்ள
தமிழ் ஐக்கிய விடுதலைக் கட்சி (T.U.L.F)

தொண்டைமான் தலைமை வகிக்கும்
இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்

இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் இடர்ப் பாடுகளைப் பற்றிப் பேசும்போது சில கசப்பான உண்மைகளைச் சொல்லித்தான் ஆக வேண்டும். வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களாகச் சென்ற இந்திய வம்சாவழியினர் எந்தக் காலத்திலும் கல்வியிலோ, பொருளாதாரத்திலோ முன்னேறுவதற்குரிய வாய்ப்பும் வசதிகளும் ஏற்படவில்லை. கொழும்புவில் வாணிகம் செய்து முன்னேறியவர்களைத் தவிர்த்து. இப்போதும் கூட, கண்டி, பட்டிகோலா, வெள்ளவத்தை. திரிகோணமலை, வவுனியா போன்ற கிழக்குப்பகுதிகளிலும் மலைநாட்டுப்பகுதிகளிலும் வசிக்கும் லட்சக் கணக்கான இந்திய வம்சாவழித்தமிழர்களின் நிலை இது தான். ஏதோ வயிற்றைக் கழுவிக்கொண்டு இருக்கின்றார்களேயன்றி வாழ்க்கைத்தரத்தில் எந்த விதமான உயர்ச்சியும் இல்லை. மண்டபம், திருச்சி போன்ற அகதிகள் முகாமுக்கு வந்திருக்கின்றவர்களின் நிலையைப் பார்த்தால் இந்த உண்மை தெளிவாக விளங்கும். கல்வியின்மையும், ஏழ்மையும் இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ இலங்கைத் தமிழர்கள் இவர்களை மதிப்பதில்லை. சமூகத் தொடர்பான எந்தப் பிணைப்பும் உறவும் கிடையாது. கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூகஉறவிலும் பின்தங்கிக் கிடக்கின்ற இந்திய வமிசாவழித் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான சில சலுகைகள் பெறுவதற்குத்தான் தொண்டைமான் தலைமையில் இயங்கும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் பாடுபட்டு வருகிறது.

சிங்களவரின் உண்மையான ஆத்திரம் எல்லாம் இலங்கைத் தமிழர்கள் மீது தான். அண்மைக் காலம் வரை ராணுவத்திலும் அரசுப் பதவிகளிலும் உயர்ந்த நிலையில் இருந்த இவர்கள் கல்வியிலும், செல்வ வளத்திலும் பின்னடைந்தவர்கள் அல்ல. இவர்கள் மீது ஏதாவது ஒரு காரணம் காட்டி சிங்களவர் இனக்கலவரம் செய்யும்போது இடையில் அகப்பட்டு இன்னல் அனுபவிப்பது இந்திய வமிசாவழித்தமிழர்தான். விடுதலைப்புலிகள் எனப்படும் அதிதீவிர இயக்கம் நடத்துவது எல்லாம் ஈழத்தமிழர்கள் தான். ஈழத்தமிழர்களைப் பழி வாங்கும் நோக்கம் தான் சிங்களவருக்கு உண்டு என்றாலும், அண்மையில் கொழும்புவில் கண்ணில் கண்டவர்களையெல்லாம் கொன்று குவித்து நகரத்தில் தமிழர் வாழும் பகுதிகளைத் தீக்கரையாக்கி விட்டனர். பாகிஸ்தான், பங்களா தேசம் போன்ற சில நாடுகளைத் தவிர பெரும்பான்மையான நாடுகள் இலங்கை இராணுவம் முன்னின்று நடத்திய வெறியாட்டத்தை கண்டித்-

துள்ளன. அகில உலக நிதி நிறுவனம் (I.M.F) கூட இலங்கைக்குச் செய்வதாக இருந்த நிதி உதவியை மறுபரிசிலனை செய்வதாகக் என்று கூறுகிறது.

## ஜூலியஸ் ஜெயவர்த்தனா

1977-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்தவர். தொடக்க நிலையில் தமிழர்கள் இவரிடம் நம்பிக்கை வைத்திருந்தனர். சிங்கள இனவெறியர்களின் கருத்துக்குச் செவி சாய்க்காமல் போனால், அரசியல் வாழ்வுக்கு உலை வைத்து விடுவார்கள் என்ற அச்சத்தில் தான் இப்போது இவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இவரை இந்த முறையில் ஆட்டிப்படைப்பவர்களில் சிரில் மாத்யூ. அதுலத் முதலி ஆகிய இரண்டு அமைச்சர்களைக் குறிப்பிடலாம். கடந்த ஆகஸ்டு திங்களில் பயங்கரமான இனக்கலவரம் நடந்தபோது 'சிங்கள மக்களின் விருப்பங்களுக்கு நான் செவிசாய்க்க வேண்டியவனாக இருக்கிறேன்'' என்று இவர் கூறியதும் இதற்கு ஒரு சான்று. அண்மையில் சிங்களவர் நடத்திய இனக்கலவரம் மிகக் கொடிய முறையில் இருந்தது என்றாலும், பல ஆண்டுகளாக அங்குமிங்குமாக சிங்களவரின் தாக்குதல் சட்டரீதியாகயும், மறைமுகமாகவும் நடந்து கொண்டுதான் இருந்தது. 1979-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் பயங்கரவாதிகளை அடக்குவதாகச் சொல்லிக் கொண்டு ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்தை அவசரசட்டத்தின் கீழ் கொண்டு வந்தார். இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் வீரதுங்கா அங்கே ராணுவத் தலைவராக நியமிக்கப்பட்டார். ராணுவத்திலும், காவல் துறையிலும் அலுவலகக் காரணங்களுக்காக யாரைப் பழி வாங்க வேண்டுமோ அவர்களை அங்கே மாற்றினார்கள். அவர்களும் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள தமிழ் மக்களைச் சொல்லொணாத கொடுமைப் படுத்தினார்கள். அவசரநிலை, நெருக்கடி நிலை என்றும் அறிவித்து விடும்போது, அவர்கள் பேயாட்டம் ஆடுவதற்குச் சட்ட ரீதியான வசதி கிடைத்து விடுகிறது. அண்மையில் கொழும்புவில் நடந்த இனவெறிக்கும், கொலைகளுக்கும் காரணமே இந்தச் சட்டம தான். 1983 - ஜுன் 4-ஆம் நாள் செயல் முறைக்கு வந்த பாதுகாப்புச் சட்டத்தின்படி இராணுவத்தினர் யாரையும் எப்படியும் ஒடுக்கிக் கொன்று விட்டு எந்த சவத்தையும் பிரேத பரிசோதனையின்றி

உடனடியாக அடக்கம் செய்து விடலாம். சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்து சிறையில் அடக்கலாம் தற்காப்புக்காக யாரையும் கொன்று விடலாம். இத்தகு கொடிய சட்டங்களைத் துணைக் கொண்டு தான் இலங்கை ராணுவம் வெளிக்கடை சிறையில் குட்டி மணி உள்ளிட்ட நாற்பதுக்கு மேற்பட்ட அரசியல் கைதிகளைக் கொன்று குவித்தது. இந்தச் சட்டங்களைக் திரும்பப் பெற்று பூரண அமைதி நிலவச்செய்வதுஜெயவர்த்தனா செய்ய வேண்டிய உடனடிப்பணியாகும்.

## இந்திரா காந்தி

நூற்றி ஒன்று நடுநிலை நாடுகளுக்குத் தலைவராக விளங்கும் பாரதப் பிரதமர் கலவரம் உச்சநிலைக்கு வந்த ஒரு வாரம் கழித்துக் காட்டிய வேகத்தையும் விரைவினையும் தொடக்கத்தில் காட்டியிருக்கலாம். சைப்ரஸ் தீவிலும், ஐக்கிய நாடுகள் பத்திரிகை நிருபர் சங்கத்திலும் இலங்கைப் பிரச்னையைப் பேசியது போன்றே ஐ.நா பெருமன்றத்திலும் இதுபற்றிக் கூறியிருக்க வேண்டும். பாதிக்கப்படுகின்ற தமிழ்மக்களின் இன்னலைக் காலத்தால் உணர்ந்து முன்னறிவிப்பு செய்யக் கூடிய ஒருவரை இலங்கையில் தூதுவராக நியமிக்க வேண்டும். ஒரு தமிழரை அந்தப் பதவிகு நியமனம் செய்யவேண்டும் என்பது நெடுநாளைய வேண்டுகோள். இதில் ஒன்றும் தவறில்லை. தனது தந்தையாரின் காலத்திலிருந்து நம்பிக்கைக்கு உரியவரான கோபாலசாமி அய்யங்கார் மகன் பார்த்தசாரதியை சிறப்புத் தூதுவராக அனுப்பியது போன்று, மத்திய அரசின் ஆணைக்கு மனம், மொழி மெய்களால் பணிந்து போகக் கூடிய ஒரு தமிழரை இனியாவது இலங்கைக்குத் தூதுவராக அனுப்புவது பொருத்தமாகும்.

## தமிழகத்தலைவர்கள்

இலங்கைத் தமிழர்களின் மீது இழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்து ஒருமித்த குரலோடு கண்டன ஊர்வலங்கள் நடத்தியும் தீர்மானங்கள் போட்டும் பொதுமக்களிடையே எழுச்சியும்உணர்ச்சியும் வழிந்தோடச் செய்த தமிழகத் தலைவர்களான எம்.ஜி.ஆர், கருணாநிதி, நெடுமாறன் ஆகியோர் பாராட்டத் தகுந்தவர்கள். தமிழகத்தின் இன்றைய ஆளும் கட்சி இலங்கைப் பிரச்னையில் போதிய

வேகமும், விரைவும் காட்டவில்லை என்பது பொதுப்படையான குற்றச்சாட்டு. பொறுப்பில் இருப்பதாலும், மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டிய நியதியினாலும், இந்த அளவுக்கு மேல் எதிர்பார்த்து அவர்களைக் குற்றஞ்சாட்டுவது பொருத்தமற்றது. தானும், அன்பழகனும் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தது மட்டுமன்றி தங்களது கட்சியைச் சார்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை உண்ணா விரதம் இருக்கச் செய்து டில்லி அரசின் கவனத்தை ஈர்த்தது காலத்தினால் செய்த தொண்டாகும். இதற்கு அரசியல் நோக்கம் கற்பிக்க வேண்டிய தேவையில்லை. கருணாநிதி ஐ.நா மன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோளை சட்டரீதியாகப் பார்ப்பது தேவையற்றது. பண்டித நேரு பிரதமராக இருந்தபோது ஒரு முறை இந்தியாவில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. பொருளாதார நிபுணர் மினுமஸானி உள்ளிட்ட 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கன் காங்கிரசுக்குகோதுமை அனுப்புமாறு வேண்டிக் கொண்டார்கள். பண்டித நேரு ஆத்திரப்பட்டார். அவ்வளவே, எனவே காலத்தின் தேவை கருதி வழக்கமற்ற சில செயல்கள் செய்தாலும், அதற்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டியதில்லை. நெடுமாறன் நடத்திய தியாகப் பயணத்தையும் இந்தக் கோணத்தில் தான் பார்க்கவேண்டும். பயணம் செய்ய முடியுமா? செய்தாலும் உருப்படியாக என்ன செய்து விட முடியும் என்றெல்லாம் கேட்பதில் பயனில்லை. தமிழர்களின் உணர்ச்சியினை ஈழத்து அரசு புரிந்து கொள்வதற்கும், தமது இன்னலைப் பகிர்ந்து கொள்ள இலட்சக்கணக்கான தாய்த்தமிழ் நாட்டினர் ஆயத்தமாக உள்ளனர் என்று இலங்கை வாழ்தமிழர்கள் அறிந்து கொள்ளுவதற்கும் அப்பயணம் உறுதுணையாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

**எதிர் காலம்**

மீதமுள்ள பத்துலட்சம் தமிழர்களை இந்தியாவிற்குள் ஏற்றுக் கொள்வது என்பது இயலாத காரியம் என்கிறார் இந்திரா. தனி ஈழநாடு அமைத்தாலும், அதில் தோட்டத் தொழிலாளர்களாகிய தமிழர்கள் இணைந்து வாழ முடியாது என்கிறார் தொண்டைமான். ஆயின் இந்திய வமிசாவழித் தமிழர்களின் நிலை என்ன? இவர்களில் ஒரு பகுதியினரையாவது அந்தமான் தீவுகளில் குடியேறச் செய்வது பொருத்தமாகலாம். மத்திய மாநில அரசுகள் இணைந்து இந்த நற்காரியத்தைச் செய்ய வேண்டும்.

— பழனி. அரங்கசாமி.

# நூல் மதிப்புரை

I. 1. பாரதியின் நீதிகள் : எஸ். குலசேகரன்—அமிழ்தம் பதிப்பகம். நார்த்தாம் பூண்டி, திருவண்ணாமலை வட்டம் (வ. ஆ) 606809. ரூ 4.50. 80 பக்.

2. தடாதகைப்பிராட்டி : எஸ். குலசேகரன்—அமிழ்தம் பதிப்பகம். நார்த்தாம்பூண்டி, திருவண்ணாமலை வட்டம் (வ. ஆ) 606809. ரூ. 7-00. 112. பக்.

1. ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், திருக்குறள், நாலடியார் போன்ற நீதி நூல்கள் தமிழரின் மரபுச் செல்வங்களாகும். சுப்பிரமணிய பாரதியும் ஔவையாரின் ஆத்திச்சூடியைப் பின் பற்றிக் காலத்துக்கேற்பப் புதிய ஆத்திசூடி புனைந்தார். பாரதியின் சிறப்புக் கருத்துக்கள், புதிய ஆத்திச்சூடி, பாப்பாப்பாட்டு, முரசு, இலட்சிய முழக்கம் என்ற தலைப்புகளில் குழந்தைகள் படித்துப் பயன் பெறுவதற்காக ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். நூலின் நடை மேடைப் பேச்சுப் போன்று தோற்றமளித்தாலும் குழந்தைகள் மூத்தோர் உதவியுடன் படித்து இன்புறலாம்.

2 மலயத்துவச பாண்டியன் மகளாய்த் தோன்றிய அங்கயற் கண்ணியின் கதையைத் தீந்தமிழில் வடித்துள்ளார் ஆசிரியர். பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தின் சாறு இந் நூல் எனலாம். நிகழ்ச்சிகளைச் சுவை குறையாது உரைக்கும் திறன்படைத்தவர் ஆசிரியர். இறைவனின் திருமணக்கோலம் காணவந்த பெண்கள் "ஆடைகள் நெகிழ அழகுப் பூவுடலி" மணம் கமழும் சந்தனம் பூசி, நாணம் மிகக் கொண்டு முடித்த கூந்தலை அவிழ்த்துச் சேர்த்து வாரிப்பின்னி உடலாகிய மாந்தளிர் முழுவதும் மன்மதனுடைய பாணங்கள் தைக்க உடல் சோர்வர். உள்ளம் நெகிழ்வர்" (பக். 87-88) தடாதகையின் திருமணக்கோலத்தை உரைக்கும் பகுதி மலயத்துவச பாண்டியனின் குலவிளக்கு குங்குமச் சிமிழ்-கொத்தலர் பூங்குழலி-கோமளநாயகி பெண்யானை போன்ற தடாதகை தனது இருசெவிகளிலும் இரகசியம் பேசும் தன்மைபோல வடித்த குழைகளைச் சூரிய ஒளி மழுங்கும் வண்ணம் அணிந்தாள்." (பக். 100).

சந்தியை உரிய இடங்களில் நிரப்பி சிற்சில எழுத்துப் பிழைகளை நீக்கினால் நூல்மேலும் பொலிவுறும்.

II. 1) புத்த தேவ போஸ் : அலோகரஞ்சன் தாஸ்குப்தா
[தமிழாக்கம் : தா.வே. வீராசாமி] 80 பக். 1982

2) ஜெயதேவர் : சுநீதி குமார் சாட்டர்ஜி
[தமிழாக்கம் : டி.எஸ். பார்த்தஸாரதி] 85பக் 1983

3) வேதம் வேங்டெராய சாஸ்திரிகள் ; (இளைய)
வேதம் வேங்கடராய சாஸ்திரி
[தமிழாக்கம் : சு. செல்லப்பன்] 101 பக். 1983,

ஒவ்வொன்றும் விலை ரூ 4/-

வெளியீடு : சாகித்திய அக்காதெமி,

இரவீந்திரபவன், புதுதில்லி-110001.

புத்த தேவ போஸ் (1908-1974) ஒரு பலதுறைவங்க மொழி எழுத்தாளர். கவிஞர், கட்டுரையாளர், கதைபுனைபவர், திறனாய்வாளர், நாடகாசிரியர் என்ற வரிசை அவருக்குப் பொருந்தும். நூற்றுக்கு மேற்பட்டநூல்களை எழுதிய அவரது பாடல்களில் செயற்கை ஒளி வீசுகிறது. வங்காளக் கவிதையைப் பழையவார்ப்படச் சொற்றொகுதியிலிருந்து அவர் விடுவிக்க விரும்பினார்.

அவருடைய நடை அவர் கவிஞர் என்பதை விடத் தலை சிறந்த உரைநடை எழுத்தாளர் என்பதை நிலை நாட்டும். நாவல் ஒரு கலவை வடிவம் என்பது புத்ததேவர் நாவல்களுக்குப் பொருந்தும். புத்த தேவரின் நாவல்கள் வாழ்க்கையை விட்டு வாழ்வதைத் தேர்ந்தெடுக்கின்றன. புத்த தேவரின் பற்பல சிறுகதைகளில் வெளி நாட்டில் பெரிதாகப் போற்றப் பட்டவை. அகப்பயணத்தின் கூறுகளை உருவாக்கும் திறனை நாடக ஆசிரியராக இருந்து புத்ததேவர் காட்டுகிறார்.

வங்க மொழி அறிஞரும், திறனாய்வாளரும், அரசியல்வாதியுமான சுநீதிகுமார் சாட்டர்ஜீ கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து கீதகோவிந்தம் படைத்த ஜெயதேவரினைப்

பற்றி திறம்பட எழுதியுள்ளார். பாலேந்திரநாத தாகூர், 'கீத கோவிந்தத்தில் கீதங்கள் இருப்பது உண்மையே, ஆனால் கோவிந்தன் (விஷ்ணு) காணப்படுகிறாரா என்பது தான் ஐயத்திற்கு இடமாக உள்ளது'' என்று கூறுகிறார். கீத கோவிந்தத்தில் 12 சருக்கங்களும் 24 பாடல்களும் 97 சுலோகங்களும் உள்ளன. சருக்கங்களில் குறிப்பிடப்படும் பொருள் ஒன்றே ஜெயதேவர் இயற்றியதாகக் கருதப்படும் இரண்டு துதிப்பாடல்கள் சீக்கியரின் குரு கிரந்தஸாஹீப்பில் உள்ளன. கீதகோவிந்தம் பாரதம் முழுவதிலும் பரவியது. இசையை உருவாக்குவதில் பெரும்பங்குவகித்த ஜெயதேவரைப் பற்றி நிறைய செய்திகள் இந்நூலுள் காணக்கிடைக்கின்றன.

வேதம் வேங்கடராய சாஸ்திரி நெல்லூர் மாவட்டத்தில் தமிழ்பேசும் மிகப் பல பிராமணர் குடும்பங்களுள் ஒன்றில் தோன்றியவர். 1886 - ஆம் ஆண்டில் சென்னைக்கிறித்தவக் கல்லூரியில் சமஸ்கிருதப் பண்டிதராகப் பணியாற்றிய இவரது தொடக்க கால இலக்கியப் பணிகளுள் கதாசரித சாகரம், அபிக்ஞான சாகுந்தலம் என்பவற்றின் தெலுங்கு மொழி பெயர்ப்பு குறிப்பிடத்தக்கதாகும்ா பிரதாபருத்ரீயம் என்ற தெலுங்கு நாடகம் எழுதப் பட்டதால் தென்னிந்தியாவில் ஒரு பெரிய இலக்கிய மேதை உருவாகி விட்டதாக சாஸ்திரிக்குப் புகழஞ்சலி வழங்கப் பட்டது. சமஸ்கிருத நூல்களுக்கு தெலுங்கு விளக்கவுரைகளை அவர் எழுதினார். ஒரு தனிமனிதர் பல்கலைக் கழகங்கள் செய்யக் கூடிய பணியைத் தெலுங்கு மொழிக்காற்றினார்.

நூலாசிரியர் அவருடைய பெயரனே. இருப்பினும் விருப்பு வெறுப்பின்றி நூலை எழுதியுள்ளார்.

மூன்று நூல்களிலும் காணப்படும் தமிழ் மொழிபெயர்ப்புகள் நன்றாக உள்ளன.

—கு. சி. கமலையா

மதிப்புரைக்கு நூல்கள் அனுப்புவோர் நூலின் இரண்டு பிரதிகளை ஆசிரியர் 'செந்தமிழ்' தமிழ்ச்சங்கச்சாலை மதுரை - 1 என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

# சங்கச் செய்திகள்

## மதுரைத் தமிழ்ச் சங்கத்

## தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

*மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்புகள் மற்றும் தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள்:*

---

1982 83 ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி - பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும், மேல்நிலைப்பள்ளி - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகின்றோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற அன்பர்களுக்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்*

*உயர்நிலைப்பள்ளி 10 - ஆம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம் :*

| வ.எண் | மாணவர் பெயர் பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | ப. சுவாமிநாதன் மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளி மதுரை-10 | 183 | முதல் பரிசு | ரூ. 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | ஆர்.எஸ். பொன்மகள்<br>என்.எல்.சி. பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி,<br>நெய்வேலி | 179 | இரண்டாவது பரிசு | ரூ. 10 |
| 3. | த. சசிகலா<br>அரசினர் உயர்நிலைப்பள்ளி<br>ஆட்சிப்பாக்கம் | 178 | மூன்றாவது பரிசு | ரூ. 10 |
| 4. | கே. லட்சுமி<br>கல்யாணசுந்தரம்<br>மேல்நிலைப்பள்ளி<br>தஞ்சாவூர் | 178 | மூன்றாவது பரிசு | ரூ. 10 |

(மூன்றாம் பரிசுத்தொகை ரூ. 25 உடன் ரூ. 5 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது.)

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ஆர். எஸ். சித்ரா<br>அரசினர் மேல்நிலைப்பள்ளி<br>காரிமங்கலம் | 174 | ஆறுதல் பரிசு | ரூ. 10 |
| 6. | கே. ராம்குமார்<br>எம். எல். டிபிள்யூ. ஏ.<br>உயர்பள்ளி<br>மதுரை-1 | 172 | ஆறுதல் பரிசு | ரூ. 10 |
| 7. | ஆர். சுமதி<br>அரசினர் மகளிர்மேல்நிலைப்<br>பள்ளி<br>மேச்சேரி | 171 | ” | ரூ. 10 |
| 8. | ஆர். கற்பகம்<br>மாநகராட்சி மகளிர்<br>உயர்நிலைப்பள்ளி<br>மணிநகரம், மதுரை - 1 | 171 | ” | ரூ. 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | எம். சரஸ்வதி<br>அரசினர் மகளிர்<br>மேல்நிலைப்பள்ளி, மற்றும்<br>ஆசிரியப் பயிற்சி நிறுவனம்,<br>நாமக்கல் | 170 | ஆறுதல் பரிசு | ரூ. 10 |
| 10. | சி. திருமுருகன்<br>ஜீவானந்தம் அரசு மேல்<br>நிலைப்பள்ளி, முதலியார் பேட்டை<br>பாண்டிச்சேரி | 170 | ” | ரூ. 10 |
| 11. | மீ. சுஜாதா<br>புனித சூசையப்பர் பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி<br>மதுரை-9 | 170 | ” | ரூ. 10 |
| 12. | பி. சாவித்திரி<br>டி.வி.எஸ். மேல்நிலைப்பள்ளி<br>மதுரை | 170 | ” | ரூ. 10 |
| 13. | அ. சோபியா<br>சின்னாத்தா அரசு பெண்கள்<br>உயர்பள்ளி<br>முத்தியால்பேட்டை<br>பாண்டிச்சேரி | 170 | ” | ரூ. 10 |
| 14 | அ. மீனா<br>திலகர் வித்தியாலயம்<br>மேல்நிலைப்பள்ளி<br>கல்லிடைக்குறிச்சி | 170 | ” | ரூ. 10 |
| 15. | எஸ். டி. சரவணன்<br>அரசினர் உயர்பள்ளி<br>அத்தாணி | 167 | ” | ரூ. 10 |

| | | | |
|---|---|---|---|
| 16. ச. சுமதி<br>புனித பிலோமினாள்<br>பெண்கள் உயர்பள்ளி<br>திண்டிவனம் | 167 | ” | ரூ. 10 |
| 17. எஸ். ஜெயலட்சுமி<br>அரசினர் பெண்கள்<br>உயர்பள்ளி, கதிர்காமம்,<br>பாண்டிச்சேரி | 167 | ” | ரூ. 10 |
| 18. பி. கூத்தாலெட்சுமி<br>அரசினர் மகளிர் உயர்பள்ளி<br>மானாமதுரை | 167 | ” | ரூ. 10 |
| 19. மு. கீதாஞ்சலி<br>சிறுமலர் மகளிர் மேல்<br>நிலைப்பள்ளி<br>மதுரை-19 | 167 | ” | ரூ. 10 |

மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. எஸ், ராஜாமணி<br>புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி<br>கடலூர், தெ. ஆற்காடு மாவட்டம் | 174 | முதல் பரிசு | ரூ. 50 |
| 2. என். முத்து கிருஷ்ணன்<br>தியாகராசர் நன்முறை மேல்<br>நிலைப்பள்ளி<br>மதுரை - 9 | 174 | முதல் பரிசு | ரூ. 50 |

முதற்பரிசுத் தொகை ரூ. 100 - ஐ ஒரே மதிபெண் பெற்ற இரு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப் படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 3. ந. செல்வம்<br>வலிவலம் தேசிகர் மேல்நிலைப்பள்ளி<br>வலிவலம் | 173 | இரண்டாம் பரிசு | ரூ. 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | க.ரா. சத்தியபாமா<br>என் எல்,சி. பெண்கள்<br>மேல்நிலைப் பள்ளி<br>நெய்வேலி | 173 | இரண்டாம்<br>பரிசு | ரூ. 25 |

இரண்டாம் பரிசுத் தொகை ரூ. 50/-ஐ ஒரே மதிப்பெண் பெற்ற இரு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | ரெ. இராமசேஷன்<br>அழகப்ப செட்டியார்<br>பயிற்சிக் கல்லூரி மாதிரி<br>மேல்நிலைப்பள்ளி<br>காரைக்குடி | 171 | மூன்றாம்<br>பரிசு | ரூ. 25 |
| 6. | வி. ராமநாதன்<br>டி.வி.எஸ். மேல்நிலைப்<br>பள்ளி,<br>மதுரை | 168 | ஆறுதல் பரிசு | ரூ. 10 |
| 7. | ஆர். மகாலிங்க மூர்த்தி<br>இராசா மேல்நிலைப்பள்ளி<br>இராமநாதபுரம் | 168 | ஆறுதல் பரிசு | ரூ. 10 |
| 8. | ஏ. ஆரோக்கிய<br>செயசந்திரன்<br>தூயமரியன்னை மேல்<br>நிலைப்பள்ளி<br>மதுரை-1. | 167 | ” | ரூ. 10 |
| 9. | யு. கமலா<br>எஸ்.எம்.எஸ்.எம். மேல்<br>நிலைப்பள்ளி<br>சசீந்திரம் | 166 | ” ” | ரூ. 20 |
| 10. | எஸ். அஜந்தா<br>அரசினர் மகளிர் மேல்<br>நிலைப்பள்ளி மற்றும்<br>ஆசிரியப் பயிற்சி நிறுவனம்<br>நாமக்கல் | 166 | ” ” | ரூ. 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | ஆர். சித்ரா<br>எஸ்.ஆர். என். வி. மேல்<br>நிலைப்பள்ளி<br>இக்கிகுமி நாயக்கன் பாளையம் | 165 | ” ” | ரூ. 10 |
| 12. | வி. பரணி<br>சௌராட்டிரா பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி<br>மதுரை | 165 | ” ” | ரூ. 10 |
| 3. | இர. மோகன்<br>தூய வளனார் மேல்நிலைப்<br>பள்ளி<br>கடலூர் | 164 | ஆறுதல் பரிசு | ரூ. 10 |
| 14. | என். புவனேஸ்வரி<br>சி.செ. பெண்கள் மேல்<br>நிலைப்பள்ளி<br>கோட்டையூர் | 163 | ” ” | ரூ. 10 |
| 15. | எஸ் அனுராதா<br>கேப்ரன்உறால் பெண்கள்<br>மேல்நிலைப்பளளி<br>மதுரை | 163 | ” ” | ரூ. 10 |
| 16. | பி. மெய்யம்மை என்ற<br>புவனேஸ்வரி<br>சி.செ. பெண்கள் மேல்<br>நிலைப்பள்ளி<br>கோட்டையூர் | 163 | ” ” | ரூ. 10 |

# தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

*பேரன்புடையீர்! வணக்கம்*

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள், புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிகஉயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் தமிழ் மொழிக்கூடம் ஒன்றை நிறுவினார். இன்றைக்கு கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இம்மொழிக்கூடத்தில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

*பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்குத் திருவுருவச் சிலை*

பாண்டித்துரைச்சாமி தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை அறிந்து அன்னாரின் திருவுருவச்சிலையை மதுரையின் மையப் பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

*தேர்வின் அமைப்பும் பயனும்:*

பொதுத் தேர்வுகளிலும் பல்கலைக்கழகத் தேர்வுகளிலும் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த் தேர்வு கடந்த 82 ஆண்டுகளாகச் செவ்வனே நடத்தப்பெற்று வருகிறது. இத்தேர்வுகளில் ஆண்டுதோறும், தமிழகத்திலுள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப் பாடப் பகுதிகளே தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்வுகளுக்கும் உரிய பாடப்பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு (Public Examination) முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு, நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு பெரும் வாய்ப்பளிக்கின்றது.

*சான்றிதழும் சிறப்புப் பரிசும்*

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் மேல்நிலைப்பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும். பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள், தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச்சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம்:-

# உயர்நிலைப் பள்ளி
# மேல்நிலைப் பள்ளி

| வகுப்பு | தேர்வுக் கட்டணம் | தேர்வு தாள் | தேர்வு நேரம் |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு | ரூ. 4.00 | 11-2-84 | முதல்தாள் 10 - 12.30<br>இரண்டாம் தாள் 2— 4.30 |
| மேல்நிலைப் பள்ளி இறுதியாண்டு பொதுத் தமிழ் | ரூ. 4.00 | 25-2-84 | முதல்தாள் 10—1<br>இரண்டாம் தாள் 2 5 |
| சிறப்புத் தமிழ் | ரூ. 2.25 | 27-2-84 | 10—1 |

கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதி நாள் 11—1-84

### தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக் கொள்ள வேண்டிய செலவுத் தொகை

10 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள் மொத்தத் தேர்வுக் கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 10 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் செலவுத் தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத் தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செலவானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மாணவர் பெயர்ப் பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல், வரவு செலவுப் பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்,

*அன்பளிப்பு*

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினை சென்ற ஆண்டு முதல் தாள் ஒன்றிற்கு, பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| உயர்நிலைப் பள்ளி - பத்தாம் வகுப்பு | ரூ. 1.00 |
| மேல்நிலைப் பள்ளி - இறுதியாண்டு (பொதுத்தமிழ்) | ,, 1.00 |
| சிறப்புத்தமிழ் | ,, 1.10 |

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

*அன்பு வேண்டுகோள்*

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்தவும் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர்தம் பெயர்ப் படிவங்களை உங்களுக்கு அனுப்புவதற்கும் முன்கூட்டியே மாணவர் எண்ணிக்கையை அறிந்திட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இந்த இதழின் கடைசிப்பக்கத்தில் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை என அச்சிடப்பட்டுள்ள பகுதியினை தனியாக எடுத்து அதில் உங்கள் பள்ளியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து எங்களுக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அஞ்சல் தலை ஒட்டிய அஞ்சலுறை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் இப்பாரம் கிடைத்த உடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பதிவுப் பட்டியல் (2) வரவு செலவுப் பட்டியல் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர் பட்டியல் (4) கால அட்டவணை தேர்வுக் கட்டணம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக்கொள்ளும் தொகை விபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்வாண்டு தேர்வில் கலந்துகொள்ள இயலவில்லையென்றாலும் எங்கட்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தமிழ்ச்சங்கத் தேர்வில் மாணவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கும் அரசு ஆணை*

R. Dis. 166528/65 dated 22—12—65 என்ற ஆணையின் (G.O) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

*சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

செயலாளர்,<br>
*மதுரைத் தமிழ்ச் சங்கம்.*<br>
*தமிழ்ச் சங்கச் சாலை,*<br>
*மதுரை - 625001.*

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆச்கமும், ஊக்கமும் அளிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

சேதுபதிமகாராணி

தங்கள் அன்புள்ள

திருமதி த. இந்திராதேவி

T.P.M. *பெரிய சுவாமி*

தலைவர்

செயலாளர்

(தமிழ்ச் சங்கத்திற்கு எடுத்து அனுப வேண்டிய பக்கம்)

தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர் :

பெறுநர்

செயலாளர் அவர்கள்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001.

ஐயா,

எங்களுடைய உயர்நிலைப்பள்ளி/மேல் நிலைப்பள்ளி மாணர்கள் நம்முடைய தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்வில் தோராயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பெயர்ப் பட்டியலும், தேர்வு பற்றிய பிற குறிப்புக்களையும் அனுப்பி வைக்கவும். விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ———.

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உயர்நிலைப் பள்ளி (பத்தாம் வகுப்பு) | ——— |
| மேல்நிலைப் பள்ளி 2 - ஆம் ஆண்டு (பொது) | ——— |
| மேல்நிலைப்பள்ளி 2 - ஆம் ஆண்டு சிறப்புத் தமிழ் | ——— |

நாள்: இங்ஙனம்

தலைமையாசிரியர் / தமிழ்த்துறைத் தலைவர்

❀ மணியம் பிரஸ் மதுரை - 9 ❀